உ

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி	சித்தார்த்தி௵ ஆடிமீ கஉ	பகுதி
5	1919௵ ஜூலை மீ 16உ	1

13 AUG 1919

கடவுள் வணக்கம்.

புத்தமிர்த போகமுங் கற்பகநீ ழலிற்
பொலிவுற விருக்கு மியல்பும்
பொன்னுலகி லயிரா வதத்தேறு வரிசையும்
பூமண்ட லாதிக்க மும்
மத்தவெறி யினர்வேண்டு மாலென்று தள்ளவுமெ
மாலுமொரு சுட்டு மறவே
வைக்கின்ற வைப்பாளன் மௌனதே சிகனென்ன
வந்தநின் னருள்வாழி காண்
சுத்தபரி பூரண வகண்டமே யேகமே
சுருதிமுடி வான பொருளே
சொல்லரிய உயிரினிடை யங்கங்கு நின்றருட்
சுரந்துபொழி கருணை முகிலே
சித்திநிலை முத்திநிலை விளைகின்ற பூமியே
தேடரிய சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோம யானந் தமே.

மறக்கின்ற தன்மை யிறத்தலொப் பாகு மனமதொன் றிற்
பிறக்கின்ற தன்மை பிறத்த லொப்பாகுமிப் பேய்ப்பிறவி
இறக்கின்ற வெல்லைக் களவில்லை யேயிந்த ஜன்மவல்லல்
துறக்கின்ற நாளெந்த நாள்பர மேநின் றொழும்பனுக்கே.

பொல்லாத மாமர்க் கடமன மேயெனைப் போலடுத்த
வெல்லாவற் றையும்பற் றிக்கொண் டனை யென்னை நின்மயமா
நில்லா யருள்வெளி நீநானிற் பேனரு ணிட்டையொரு
சொல்லாற் பதிந்து பரிபூர ணானந்தந் தோய்குவனே.

ஆனந்தபோதினி

சித்தார்த்திஸு ஆடிமீ ௧௨

நமது பிரார்த்தனை.

நமது அன்பூர்ந்த சந்தா நேயர்களுக்கும், விஷயதானம் புரியும் அன்பர்களுக்கும், சஞ்சிகாபிமானிகளாகிய ஏனையோர்க்கும் தெரிவித்துக் கொள்வதாவது :—

கடந்த மாதத்தோடு நமது ஆனந்தனது நான்காம் வருடம் நிறைவுபெற்று, இம்மதி முதல் 5-ம் ஆண்டு ஆரம்பமாகிறது. இதுகாறும் நமது சஞ்சிகை யாவர்க்கும் சந்தோடத்தையும் திருப்தியையும் அளிக்கும்வண்ணம் செவ்வனே நடைபெற்று வருமாறு அருள் புரிந்த கருணாநிதியாகிய பரம்பொருளை மனதாரப்போற்றித் துதிக்கின்றோம்:—

யாவும் **அவன்** அருளாலேயே நிகழ்வதாயினும், பிரத்தியக்ஷ அநுபவத்தில் நம்போன்ற மானிடர் மூலமாகவே நடைபெறக் காண்கிறோம். ஆதலின் நமது சஞ்சிகைக்குச் சந்தாதாரராகச் சேர்ந்து இதை யாதரித்து வருவதோடு, சஞ்சிகையின்மேல் மிக்க அன்புவைத்து இதன் அபிவிர்த்திக்காக மிக்க சிரத்தை யெடுத்துக் கொண்டு, தங்கள் நண்பர்களையும் சந்தாதாரராகச் சேர்த்துவைக்கும் நமது சந்தா நேயர்கட்கும், சற்றும் சுயநலங் கருதாது நம் அரியதாய்ப் பாஷையின் அபிவிர்த்தியையும் தாய்நாட்டின் க்ஷேமாபி விர்த்தியையுமே நோக்கமாய்க் கொண்டு, அரிய விஷயங்களை யெழுதியனுப்பி, நமது சஞ்சிகைக்குப் பேருதவி புரியும் அறிஞர்களாகிய அன்பர்களுக்கும் மிக்கநன்றியோடு வந்தனமளிக்கின்றோம்.

இதுகாறும் நமது சஞ்சிகையின்மேல் வைத்த அன்பும் சிரத்தையும் எள்ளளவேனும் குறையா வண்ணம் ஒழுகிவரும் நமது நண்பர்கள், இவ்வருடமும் அவ்வாறே நன்மை புரிவார்களென்று மனப்பூர்வமாய் நம்புகிறோம். ஆயினும் இன்னொரு விஷயத்தை மட்டும் ஈண்டும் நினைப்பூட்டக் கருதுகிறோம். அதாவது, சிலகாரணங்களால் நமது நண்பர்கள் இதுகாறும் செய்த உதவிகளைக் காட்டிலும் இனிச் செய்யப்போகும் உதவிகள் மிக்க பலனையளிக்குமென்று நாம் கடந்த சஞ்சிகைகளில் கூறியிருப்பதை மறவாதிருக்‍ ...பிரார்த்திக்கிறோம்.

யாவுமாய், எங்குமாய், என்றுமாய்ச் சச்சிதானந்தமாய் இலங்கி நிற்கும் தண்ணருட் கடலாம் பரமன் நமது நண்பர்கட்கு நீண்ட ஆயுளையும் இருமைப் பயன்களையு மளித்து இன்புறச் செய்ய வேண்டுமாய் அவனை மன்றாடிப் பிரார்த்திக்கின்றோம். ஓம் தத்ஸத்.

கடவுள் உண்டா?

இப்பூவுலகின்கண் "கடவுள் உண்டா இல்லையா?" என்பதை யொரு பிரமாதமான கேள்வியாக எடுத்துக்கொண்டு பலபேர் பல சமயங்கள் வாதம் புரிந்திருக்கிறார்கள். இப்போதும் எங்கோ சிலர் இருக்கலாகும். கடவுள் இல்லையென்று கூறுவோர்க்கு "நாஸ்திகர்" என்று பெயர். கடவுள் உண்டென்போர்க்கு "ஆஸ்திகர்" என்று பெயர். நாஸ்திகர் மிக்ககன்ம முடையோரென்றும் அவர்களோடு வாதம் புரியலாகாதென்றும் ஆன்றோர் நூல்கள் கூறுகின்றன. மிருகங்களுக்குக் கடவுள் என்ற நினைப்பே யில்லையென்று கருதப் படுகிறது. இவர்களுக்கோ கடவுள் என்ற நினைப்பிருக்கிறது; அதோடு காரண காரியங்களை விவகரித்து வாதம்புரியும் அறிவை யும் ஆண்டவன் அருளியிருக்கிறார். அவ்வாறிருந்தும், இவர்கள் இன்னும் பல ஜன்மங்களெடுத்து உழலவேண்டிய பெரிய கன்மச் சுமை யிவர்கள்மேலிருப்பதால், அதுகாறும் இவர்களுக்கு ஞானம் உதிக்கவழியில்லை. அதனால் இவர்கள் விஷயத்தில் நாம் பரிதாபப் படவேண்டிய தன்றி வேறில்லை.

அறிவாளிகள் இத்தகைய வாதத்தில் ஒருபோதும் தலையிட மாட்டார்கள். ஏனெனில் காரணமின்றிக் காரியம் ஒன்றிராது என்ற உண்மையை யவர்கள் உணர்வார்கள். பிரத்தியட்சப் பிரமாணம் ஒன்றையே அங்கீகரிக்கும் வகுப்பார்கள்கூட அப்பிரமாணத்தில் அடங்காத கடவுளை உண்டென்றே யொப்புக்கொள்கிறார்கள்.

கடவுள் உண்டென்று பிரத்தியட்சமாய் நிரூபிப்பது சாத்திய மான காரியமல்ல. ஏனெனில் அவர் நம்மைப்போல் நாமரூப முடையவரல்ல—அதாவது கண்ணால் காணக்கூடிய உருவமல்ல. அப்படியாயின் பக்திமான்களாகிய அடியார்களது சரித்திரங்களில் சுவாமி விருஷபவாகனரூடராக மான்மழு சூலம் முதலிய சின்னங்க ளோடும், கருடவாகன ரூடராகச் சங்குசக்கர கோதண்ட தாரி யாகவும் சத்திகள் சமேதராய்க் காட்சி கொடுத்ததாகக் கூறப்பட் டிருக்கிறவை யாவும் பொய்யோ வெனின், ஒருகாலும் பொய் யல்ல. கடவுள் சர்வசக்தி யுடையவராதலின் யாரார் பக்தியோடு எந்தெந்த விதமாய்த் தம்மைப் பாவித்துத் தரிசிக்க விரும்புகிறார் களோ அந்தந்த மூர்த்தமாகவே யவரவர்க்குக் காட்சியளிக்கி ஆனால் அந்த உருவங்கள் அவ்வப்போது மட்டும் பக்தர்

ணார்த்தம் தோன்றி மறைவனவே யன்றி அவருக்கு நிலையான எவ்வுருவுமில்லை. அவர் ஞானமாகிய கண்ணினால் மட்டுமே அறியத் தக்கவர். அவர் இன்னரூப முடையவர், இன்ன நிறமுடையவர், இன்ன குறிகளையுடையவர் என்று வாக்கினாலே விவரித்துக்கூற முடியாதவரெனில், அத்தகைய அற்புத மூர்த்தியை ஊனக்கண்களால் ஒருவன் காணும்படி எப்படி சுட்டிக்காட்டமுடியும். அபூர்வ சந்தர்ப்பங்களில் பிரகலாதாழ்வார் இரணியனுக்குப் பகவானை நரசிங்கரூபமாக ஓர் தூணிற்றோன்றச் செய்ததுபோல் சில சமயங்களில் **அவன்** அடியார்கள் அவ்வாறுகாட்டி யிருக்கின்றனர். சம்பந்தர் பரமசிவனைத் தன் தந்தைக்குச் சுட்டிக்காட்டினார். ஆனால் அப்படிக் காட்டக் கண்ட இரணியனும் சம்பந்தர் தந்தையும் அதற்குத் தக்க புண்ணியப்பேற்றை யுடையவர்களாக விருந்தார்கள். மற்றபடி யார் வேண்டுமாயினும் கடவுளை யின்னொருவருக்குக் காட்டி அவர் உண்மையை நிரூபிக்க முடியாது. ஆண்டவன் இத்தன்மையரா யிருத்தலால் தான் ‘அநிர்வசனீயம்’ (அதாவது இன்ன தன்மையரென்று வாக்கால் கூறக்கூடாதவர்) என்று வேதம்கூறுகிறது. அப்படி யிருந்தும் கடவுள் இல்லை யென்போர் மிகச் சிலரே யாவர்.

கண்ணாலும் மனத்தாலும் அளவிடற்கரிய இப்பிரம்மாண்டமான உலகத்தையும், இதில் நிறைந்துள்ள எண்ணிறந்த சிருஷ்டி பேதங்களின் அபூர்வத்தையும், மனிதன் யுத்திக்கு எட்டாது பிரமிப்பை யுண்டாக்கும் அமைப்புக்களையும், ஒரு மனிதவர்க்கத்தில் மட்டும் ஒருவரைப் போலவே யனைவர்க்கும் ஒரேவித அங்கங்கள் இருந்தாலும், கோடிக்கணக்காக விருக்கும் இவர்களில் எந்த இரண்டுபேரும் ஒரேவிதமா யிராமல் ஒவ்வொருவரையும் வேறு பிரித்தறியத்தக்க வித்தியாசம் அமைந்தே யிருக்கும் அதியற்புத சாமார்த்தியத்தையும், கடுகினும் சிறிய ஒரு விதையினின்று பிரம்மாண்டமான ஒரு விருட்சமுண்டாவதும், ஒரு முட்டையிலிருந்து உற்பத்தியாகும் மயில் முதலியபட்சிகளின் சிறகுகளில் அமைக்கப்பட்டிருக்கும் வர்ணங்களும், புஷ்பங்களில் காணப்படும் அபூர்வ நிறங்கள், பலவித நறுமணங்களும் ஆகிய எண்ணிறந்த அதிசயங்களையும், பிரம்மாண்டமான ஆழ்ந்த கடலின் மத்தியில் சிறு அளவாயிருக்கும் இப்பூமி முழுகிப் போகாமல் இருக்கும் அதிசயத்தையும், கடலிலும் வானத்திலுமுள்ள அதிசயங்களையும், இன்னும் இராப்பகல் காலந்தவறாது மாறிவரல், மனிதன் கொஞ்சம் கொஞ்சமாகக் கண்டறிந்து கையாளும் பலவித சக்திகள் முதலிய எண்ணிறந்த அதிசயங்களையும் ஒருவன் சிந்திப்பானாயின், அவன் எவ்வளவு மூடனாயினும், இவை யாவற்றிற்கும் ஒரு அபாரவல்லமையுடைய கர்த்தா ஒருவன் இருக்கவே வேண்டும் என்றுதான் [illegible]மானிப்பான்.

மனிதன் தனக்குள் ஆராய்ச்சி செய்வானேல் தன்னிலுள்ள அதிசய அமைப்புக்களையும், மனோவல்லமையையும் தன் அறிவினால் உணர்கிறான். அதேகாலத்தில் தன் அறிவுமிக்க சிறிய அணுப்போன்றதென்றும், தனக்குத் தாயகமாகியதும் தன் அறிவிற்கு அறிவு போன்றதுமாகிய அகண்ட அறிவு ஒன்றிருக்கிறதென்றும் உணர்கிறான்.

நாஸ்திகனும் ஒன்றும் அடியோடில்லை யென்று கூறுவதில்லை. 'இயற்கை' (Nature-நேச்சர்) என்று ஒன்றிருக்கிறது; அதன்படி யாவும் நடைபெறுகிறது என்கிறான். அவன்கூறும் இயற்கை என்பதற்கும் ஒரு உருவமாவது, இலட்சணமாவது, குணமாவது, குறியாவது, ஒன்றுமேயில்லை. அப்பெயர்மட்டுமே யிருக்கிறது. அவன் மயக்கத்தால் அச்சடப்பெயரால் கூறும் வஸ்துவே கடவுளென்று, அவன் உணராததே குறை. "கடவுள் சத்து, நித்தியம், ஆனந்த மயம்; யாவுமாய் எங்குமாய் என்றுமாய் நீக்கமின்றி நிறைந்து நிற்பது" என்ற உண்மையை யுணராக்குறையே அவனை யஞ்ஞான அந்த காரத்தில் மூழ்கவைத்திருக்கிறது.

உண்மையிவ்வாறிருப்பதால் கடவுள் இல்லையென்று கூறுவது மிகச் சுலபமே. நமக்கு அறிமுகமான ஒருவர் ஒரு நாள் நம்மைக் கண்டு, "என் சகோதரர் குடும்பத்தோடு திருப்பதிக்குச் சென்றிருந்தார். அங்கு அவர்கள் செலுத்தவேண்டிய பிரார்த்தனைகளில் ஒன்றைச் செலுத்த மறந்துவிட்டதால் அங்கேயே குழந்தைக்குச் சுரம்வந்து கஷ்டமாய்விட்டதாகவும், பிறகு நினைவுவந்து அப்பிரார்த்தனையைச் செலுத்தியவுடனே சுரம் மாயமாய்ப் போய்விட்டதென்றும் கூறுகிறார்கள். இது என்ன மூடபுத்தி, இப்படிக்கூட நடக்குமோ?" என்றார்.

"அவரவர்கள் பக்தியும் நம்பிக்கையும் எந்த அளவிலிருக்கிறதோ அதன்படி அப்படி நடப்பதுண்டு. பிரார்த்தனையைச் செலுத்தியதே சுரம் நின்றுவிட்டதே அவர்களுக்குப் போதுமான அத்தாட்சி" என்று நாம் விடையளித்தோம்.

அவருக்கு அது திருப்திப்படவில்லை. "இது உண்மையாயின், கோயிலிலுள்ள சுவாமியின் நகைகள் முதலியவைகளையே களவாடிக்கொண்டு போகிறார்களே அவர்களையேன் அந்தத் தெய்வம் ஒன்றும் செய்யக்காணோம்?" என்றார்.

நேயர்களே! இத்தகைய சந்தர்ப்பங்களில் சிலர் தெய்வம் உண்டோ இல்லையோவென்று சந்தேகங் கொள்ள நேர்கிறது. ஆனால் ஆன்றோர்கள் அத்தகைய சந்தேகங்களை யெல்லாம் களைந்தெறிந்தே நமக்குப் புத்தி புகட்டி யிருக்கிறார்கள். மனி

போல் கடவுளும் எச்செயலையும் அப்போதைக் கப்போது பிரத்தியட்சமாய்ச் செய்து காட்டவேண்டுமென்று கருதுவதும், அப்படி நடவாததாலேயே கடவுள் இல்லையென்று சந்தேகிப்பதும் பெருந் தவறு.

பிரத்தியட்சமாகக் கடவுள் சம்பந்தமான குற்றங்களை யனேகர் செய்து தற்சமயும் ஒரு தண்டனையு மடையாதவர்களாகவே காணப்படுகிறார்கள். கோயில்களிலுள்ள விக்கிரகங்களையே களவாடுகிறார்கள். அவைகளின் நகைகளைக் களவாடுகிறார்கள். இன்னும் “கோயிற்பூனை தேவர்க்கஞ்சாது” என்ற பழமொழிபோல் கோயில்களில் சரியை கிரியையாதிகளைச் செய்வோர்களும் மற்ற தொழிலாளிகளுமே அனேக துர்க்காரியங்களைச் செய்கிறார்கள். எவ்வளவோ பூர்வபுண்ணியத்தால் இப்போது அவர்களுக்கு அத்தகைய தொழில்கள் கிடைத்திருக்கின்றன. அத்தொழில்களைப் பக்தியோடு செய்யின் கண்ணப்ப நாயனார் சரித்திரத்தில் கூறப்படும் சிவகோசரியார் என்பவரைப்போல் ஆண்டவனருளை யெளிதிற் பெறலாகும். அந்தோ இவர்களோ அதை மறந்து பக்தர்களால் சுவாமியின் அபிஷேகத்திற்கென்று அளிக்கப்படும் பால், தயிர், நெய் முதலிய அபிஷேக திரவியங்களிலும் கூடக் களவாடி (மூலஸ்தானத்திற்குள் அன்னியர் பிரவேசிக்கலாகா தாகையால் அங்குள்ள) விக்ரகத்தின் பின்னாலேயே மறைத்து வைத்திருந்து பிறகு தாங்கள் உபயோகித்துக் கொள்கிறார்கள். இவ்வாறே எல்லா விஷயங்களிலும் பலவிடங்களில் நடக்கிறது. நாம் இப்படிக் கூறுவதால் அத்தொழில்களிலுள்ள அனைவருமே யிப்படிச் செய்கிறார்கள் என்று எண்ணிவிடலாகாது. இப்படிச் செய்வோரும் சிலர் உண்டு. ஆனால் இத்தகையோரைக் கடவுள் இப்போதே தண்டிக்காததால் இவர்கள் தண்டனையடையவே மாட்டார்கள் என்று கருதிவிடலாகாது. பிறகு இவர்களுக்குப் பல ஜன்மங்களெடுத்து அனுபவிக்க வேண்டிய பலத்த தண்டனை யிருக்கவே யிருக்கிறதென்பது நிச்சயம்.

கடவுளிடத்தில் மிக்க பக்திவைத்து நெறிதவறாது நடக்கும் **அவன்** அன்பர்கள் ஏதேனும் குற்றம்செய்தாலோ கடவுள் உடனே அவர்களைத் தண்டிக்கிறார். உடனே அவர்கள் அப்பாபத்தை யொழித்துவிட்டுப் பிறவிக்கு இடமின்றி **அவன்** அருளையடைய அது அனுகூலமாகிறது. சுந்தரமூர்த்தி நாயனார் திருவாரூருக்குச் செல்வதில்லை யென்று சங்கிலி நாய்ச்சியாரிடம் கடவுள் முன்னிலையில் பிரதிக்கினை செய்து விட்டுப் பிறகு தவறி நடந்தபோது உடனே ண்டவன் அவர் கண்களின் பார்வையை நீக்கிவிட்டதே யிதற்குச் ...ஸான்றாகும்.

இவ்வுண்மைகளை விளக்கிக் காட்டவே ஆன்றோர்.

“தெய்வம் உளதென்பார் தீய செயற்புகின்
தெய்வமே முன்னின்று கண்ணொறுக்கும்—தெய்வ
மில தென்பார்க்கில்லை தம் மின்புதல்வர்க் கன்றே
பலகாலும் சொல்வார் பயன்.” என்று அருளியிருக்கின்றனர்.

தாய்தந்தையர் தாங்கள் அன்புவைத்திருக்கும் தம் புதல்வர் குற்றம்செய்யின், “அய்யோ! இவர்கள் இப்படியே பல குற்றங்களைச்செய்து முடிவில் மிக்க தீமைக்குள்ளாவார்களே, இவர்களையிப்போதே கண்டித்து மறுபடி தீயவழியிற் செல்லாதபடி செய்ய வேண்டும்” என்றகருணையால் உடனே அவர்களைத் தண்டிப்பார்களே யன்றித் தங்கள் அன்பிற்குரியரல்லாத மற்றபேர் குற்றம் செய்வதைக்காணின் அவர்களைத் தண்டியார்கள்.

அதுபோலவே கடவுளும் தம்மிடம் பக்தியுடைய அன்பர் குற்றம் செய்யின் உடனே தண்டித்து அப்பாபமாகிய வினை அவர்களைப்பின் தொடர்ந்து மேல் ஜன்மத்திற்கு வித்தாகா வண்ணம் செய்துவிடுகிறார். மற்றையரோ (“அரசன் அன்று கொன்றால் தெய்வம் நின்று கொல்லும்” என்ற பழமொழிபோல்) தம் துர்ச்செய்கைகளுக்காகப் பல பிறவிகளை யெடுத்து மிக்க வேதனைகளை யனுபவிப்பார்கள்.

ஆகையால் “சச்சிதானந்த சொரூபியும், எங்கும் நிறைந்த பரிபூரணரும், கருணாநிதியும், ஏகநாயகரும், சகல மதங்களுக்கும் பொதுவானவரா யிருந்தும் எதிலும் தாக்கற்று நிற்பவரும், சர்வ சக்திமானும், நாமரூபமற்றவருமாகிய கடவுள் ஒருவருளர். அவரையன்றி நாமில்லை. அவர் எல்லார் உளத்திலும் குடியாயிருந்து இம்மையிலும் மறுமையிலும் உயிர்த்துணையா யிருக்கிறார்” என்பதை நாம் ஒருபோதும் மறவாமல் அடிக்கடி யவரைச் சிந்தித்து அவரிடம் பூரணபக்திவைத்து ஒழுகுவோமாக. ஓம் தத்ஸத்

தமிழ்ப் பாஷை

தமிழபிமானிகளாகிய சந்தாநேயர்களே! மேலே எடுத்துக்கொண்ட விஷயம் மிகப்பெரியது. இப்பூமண்டலத்துட் பிறந்துள்ள ஆறறிவுடைய ஜீவராசிகள் தங்களுடையகருத்தைப்பிறருக்கு அறிவிப்பதற்கு இன்றியமையாத கருவியாயிருப்பதே பாஷை. தேசங்கள்தோறும் பலவகையான பாஷைகள் வழங்கிவருகின்றன. தமிழ்ப்பாஷை எவ்வளவோ காலத்திற்கு முன்பு தோன்றி வடக்கே வேங்கடத்திற்கும் தெற்கில் கன்னியா குமரிக்கும் மத்தியிற் பரவி மூவேந்தரால் ஆதரிக்கப்பட்டு வந்ததென விளங்குகின்றது. “தமிழ்ப்பாஷை அகஸ்தியர் நாவிலே பிறந்து, ஆரியத்தின் மடியிலே வளர்ந்து, ஆந்திரம் முதலிய பாஷைகளின் தோழமைபெற்று, சங்கப்புலவர்களுடைய நாவிலே சஞ்சரித்து, வித்துவான்களுடைய

இலே விளையாடித் திராவிடதேசம்முழுவதும் ஏகச்சக்ராதிபத்தியஞ் செலுத்தி வந்தது" என்று வித்துவான் வேதநாயகம் பிள்ளை அவர்கள் தமிழின் அருமையைப்பற்றிக் கூறியுள்ளார்கள்.

முற்காலத்தில் தமிழ்ப்பாஷையில் பாட்டுக்களும், பாசுரங்களும் ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டிருந்தன. அத்தகைய புத்தகம் ஒரே புத்தகம் தான் குருவினிடம் இருக்கும். அதை ஒரு மாணாக்கன் படிக்க மற்றவர்கள் பின்னே சொல்லுவார்கள். பிள்ளைகளுக்குச் சந்தேகம் வருமாயின் குருவினிடம் சென்று நிவர்த்தி செய்து கொள்ளுவார்கள். இக்காலத்தில் அச்சியந்திரத்தின் உதவியால் வசன நடையில் வேண்டுமான பிரதிகள் அச்சில் பதிப்பிக்கப்படுகின்றன. ஒரே மாதிரி புத்தகங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் அகப்படுகின்றன. அதனாலேயே மாணாக்கர்கள் ஒரு புத்தகம் போனால் மற்றொன்று கிடைக்கின்றது என்ற தைரியத்துடன், படிப்பில் சிரத்தை அதிகமின்றி யிருக்கின்றனர். முற்காலத்தில் வித்துவான்கள் கவிகளும், பாசுரங்களும் எழுதி அரசர்களிடம் சென்று அரங்கேற்றி, அரசனால் அளிக்கப்படும் வெகுமதியைப் பெற்று, ஜீவித்துவந்தனர். தற்காலத்திலோ பண்டிதர்கள் அநேக பிரதிகளை அச்சிற்பதிப்பித்து அவைகளைவிற்று கௌரவமாகப் பிழைத்து வருகின்றனர். இக்காலத்தில் தமிழ்ப்பாஷையை அபிவிருத்தி செய்ய சௌகர்யங்கள் குறைவின்றி யிருந்தும் தாய்ப்பாஷையை அலக்ஷியம் செய்து அன்னிய பாஷைகளில் காலமெல்லாம் போக்குவது தமிழ்நாட்டிற் பிறந்த மக்களுக்கு அழகாகுமோ! தமிழ்நாடு செழிப்புற்றிருந்த காலத்தில் தமிழ்ப்புலவர்கள் பலர் எழுதி வைத்துப் போயிருக்கின்ற அருமையான நூல்களைப் படிக்காதவர்களும், பெயரையே கேட்டிராத அறிவிலிகளும் தவிர மற்றெவரும் தமிழ்ப்பாஷையை அலக்ஷியம் செய்யமாட்டார்கள்.

இப்படியாக சுயபாஷையில் வசனநூல்கள் ஏற்பட்ட பிறகு நம் தாய்ப்பாஷையாகிய தமிழ்ப்பாஷையைத் தூஷித்து அபிவிருத்தி செய்யாதிருத்தல் நம்முடைய தேசத்தின் க்ஷீணதசைக்கு அறிகுறியாகும். ஆயினும் இத்தகைய கெடுதி நம்முடைய நாட்டை அணுக வொட்டாமற்றடுக்கும் பொருட்டு தேசாபிமானிகள் பலர் ஒன்றுகூடி தேசீய கல்விச்சாலைகளை ஸ்தாபிக்க முயன்று வெற்றி பெற்று வருகிறார்கள். இக்கல்விச்சாலைகளில் தாய்ப்பாஷையை சிரத்தையுடன் போதிக்கத் தகுந்த ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். இத்தகைய கல்விச்சாலைகள் பற்பல விடங்களில் ஸ்தாபிக்கப் படுமாயின் நமது தாய் நாடு மேம்பாடடையு மென்பதற்கு ஐயமில்லை.

நண்பர்களே! கடைசியாக யான் உங்களுக்கும், அறிவைப் பரவச் செய்வதில் சஞ்சீவியை யொத்த இப்பத்திரிகையின் பத்திரகாசிரியருக்கும், ஓர் விண்ணப்பம் செய்து கொள்ளுகின்றேன். இப்பத்திரிகையின் சந்தாதாரர்களாகிய யாமெல்லோரும் ஒருங்கு சேர்ந்து அவ்வவ்வூர்களில் தமிழ்ச்சங்கங்கள் ஸ்தாபித்து, தாய்ப் பாஷையின் அபிவிருத்திக்காக உழைப்போமாயின், நம்முடைய இந்திய நாட்டில் தமிழ்ப்பாஷை முற்கால உன்னத நிலைமையை யடையுமென்றே யான் எண்ணுகிறேன். இத்தகைய சங்கங்கள் ஸ்தாபிக்க முடியும் வண்ணம் அருள் புரிய வேண்டுமாய் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

சென்னை.

N. K. இராஜகோபாலன்.

விடா முயற்சி.

நாம் யாவரும் உன்னதபதவியை விரும்புகிறோம். பள்ளிமாணாக்கர்கள் தங்களுடன் வாசிக்கும் மற்றபையன்களுக் கெல்லாம் முதலாகத் தேற விரும்புகிறார்கள். குடியானவன் நல்ல விளைவையும் ஆடுமாடுகள் அதிகமாயிருக்க வேண்டுவதையும் கோருகிறான். சில்லரைவியாபாரி பெரிய வியாபாரியாக ஆசைப்படுகிறான். ஆங்கிலம் கற்றவர்கள் அதிக வருமானம் வரும் உத்தியோகத்தை நாடுகிறார்கள். ஏழையாயிருப்பவன் பணக்காரனாக வேண்டுமென்ற நோக்கங் கொள்ளுகிறான். இவ்விதமே ஒவ்வொருவரும் உயர முயல்கிறார்கள்.

இவ்வித ஆசை வசமானவர்களில், சித்தியடைந்தவர்கள் சிலரே. சிலர் கடன்காரர்களாகவும், சிலர் பரீக்ஷையில் தேறாத அசடுகளாகவும், சிலர் சில்லரைக் கடைகளிலும், கீரைக்கடை, வெற்றிலைக் கடைகளிலுமிருந்து உயராமலும், சிலர் சாகும்பரியந்தம் குமஸ்தா உத்தியோகத்திலிருந்து "அன்றுகண்ட மேனி" அழியாமலும் இருக்கிறார்கள். இவ்வாறு தங்கள் வாழ் நாளை வீணாக்கி வசிப்பவர்களே நம் நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூறுபேர் காணப்படுகிறார்கள்.

ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசங்களில் தங்கள் ஆதி நிலையிலிருந்து உயராமலும், கொண்ட கருத்தை முடிக்காமலுமிருப்பவர்கள் மிகவும் சொற்பம். நம்நாட்டில் சோம்பேறிகளும், கீரைக்கடைக்கு எதிர்க்கடைவைக்கும் பொறாமைக்காரர்களும் அதிகம் உண்டு. நம்மூதாதைகளில் துருவன் 7 வயதுடைய சிறுவனாகவிருந்தும் தான் எண்ணிய கருத்தை முடிக்கவில்லையா? கௌசிகன் பன்முறை தவறியும் தன்கோரிக்கைப்படி பிர்ம்மரிஷியாகவில்லையா? ஏகலைவன் தான் நினைத்தபடி துரோணாச்சாரியாரைச் சிலையாக நிர்மாணித்து அச்சிலையிடம் வில்வித்தை கற்றுக் கொள்ளவில்லையா? ஸ்ரீமான் காந்தியடிகள் தாம்கொண்ட எண்ணங்களையெல்லாம் முட்டின்றி முடிப்பிக்கவில்லையா? நம் "ஆனந்தன்" இக்கொடிய காகிதப் பஞ்சகாலத்தில் சொற்ப சந்தாவில் தன் அரும் பெரும் கஷ்ட நஷ்டங்களைக் கவனியாது நம் ஒவ்வொருவர் அகத்திலும் மாதந்தோறும் வந்தடைந்து ஆனந்தமளிப்பதுடன், தன் எண்ணம்போல் ஓர் அச்சாபீஸ் ஏற்படுத்தி நம்மை அதன் கருத்துப்போல் ஆனந்த பரவசர்களாக்கவில்லையா? இவ்வித பரம்பரையில் உதித்த நாம், உண்ணச் சோற்றுக்கும், உடுக்கத் துணிக்கும் வழியின்றி வறுமையால் பீடிக்கப்பட்டு இருப்பது நமது ஊக்கக் குறைவேயன்றி வேறில்லை யென்பதில் எள்ளளவும் ஐயமின்றாம்.

இப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இவ்வித ஜயசாலிகள் நம் நாட்டிலில்லாத காரணம் யாது? நாம் ஆசாபாசமற்றவர்களா? கந்தமூலங்களைப் புசிக்கும் முற்றத்துறந்த ஞானிகளா? நமக்கேற்பட்டுள்ள ஆசையோ கணக்குமிதமில்லை. இவ்வித ஆசைகொண்ட, நம் கோரிக்கையைப் பூர்த்திசெய்ய பிரகிருதி தயாராகவிருக்கிறது. ஆனால் நாம் ஊக்கமற்ற பயங்காளிகளாயிருக்கிறோம். ஆகவே நமது கோரிக்கைக ளெல்லாம் அபஜெயமடைகின்றன.

நம்மிடம் தைரியலக்ஷ்மி இல்லை, ஊக்கமில்லை. எவராவது ஒருவர் எந்தவிதத்திலோ வெற்றியடைந்துவிட்டால் அவரை தேவாம்சமென்றும், முன் ஜன்மத்தில் செய்த புண்ணியத்தால் ஜெயசாலியானாரென்றும்

ஞானியானாரென்றும், சொல்லிவிட்டு அவர் கொண்ட வழியைப் பின்பற்றாத கெட்ட வழக்கம் நமக்குள் குடி கொண்டுள்ளது. மானிடர் சங்கரர், ராமாநுஜர், மாதவர், சைதன்யர், பெரியாழ்வார், கிறிஸ்து, மகமது முதலியவர்களின் படத்தைப் பூஜைசெய்து வருகிறார்களேயல்லாமல், அவர்கள் சொல்லியபடி அவர்களைப் போன்ற ஞானசீலர்களாய் வர முயல்வதே கிடையாது.

ஒவ்வொருமதத்திற்கும் ஒவ்வொரு வேதமுண்டு. அவ்வேதங்கள் கடவுளால் எழுதிவைக்கப் பட்டவையென்று அவ்வம் மதஸ்தர்கள் சொல்லுகிறார்கள். வேதத்தில் இன்னின்ன விஷயங்கள் செய்யத்தக்கவை யென்றும், இன்னின்னவைகள் செய்யலாகாதவையென்றும் விதிகள் சொல்லப் பட்டிருக்கின்றனவே யல்லாமல் வேறில்லை. உலகத்திலுள்ள சகல வேதங்களும் மதங்களும் இந்துக்களின் வேதாந்தமதத்தில் லயமாகிவிடும். வேதங்களிலும் வேதாந்தங்களிலும் சொல்லும் விஷயங்களை அறிந்து அதன்படி நடக்க முயலாமல் அவரவர் வேதத்தில் சொல்லப்பட்ட கடவுள்தான் உண்மையான தென்றும், மற்ற வேதங்கள் மனிதர்களால் எழுதப்பட்டன வென்றும், தங்கள் வேதமொன்றே கடவுளால் அளிக்கப்பட்டதென்றும், தங்கள் வேதத்தைச் சார்ந்தவர்கள் தவிர மற்றவர்கள் சாத்தானை வணங்குகிறார்கள் என்றும் சொல்லும் மதிமயக்கமுடையோர்களே நம்நாட்டில் பலருண்டு.

நாம் சிலவிஷயங்களில் ஊக்கத்துடன் முன்னேறியுள்ளோம். தலையை மூன்றுவிதக்கோலம் செய்வதிலும், மீசையை அரைகுறை யாக்குவதிலும், மதுபானம் செய்வதிலும், விதவிதமான பகட்டுத் துணிகளைப் பலவித ரூபங்களாகத்தைத்து அணிவதிலும், நமக்குத் தகாத அன்னியர் ஆசாரங்களைக் கண் மூடித்தனமாய்ப் பின் பற்றுவதிலும், வீண்பகட்டிற்காகப் பயனற்ற வழியில் பொருள் விரயம் செய்து வறுமையை வளர்ப்பதிலும், விடாமுயற்சியுடன் உழைத்து ஜயசாலிகளாய்க் கிளம்புவோரே நம்நாட்டில் அதிகமாயுளார்.

எவ்விஷயத்தில் நாம் பிரவேசித்தாலும் சத்காரியமாக இருக்கவேண்டும். அக்கர்மத்தைப்பற்றின்றிச் செய்தால் ஜெயம்வந்தாலும் அபஜெயம்வந்தாலும் துக்கமிராது. சிலர் பெருமுயற்சியுடன் ஒரு காரியத்தை ஆரம்பித்து நஷ்டம் ஏற்பட்டவுடன் அதனை ஒழித்து மறு தொழிலில் பிரவேசிக்கிறார்கள். இதுதான் நமக்குள் ஊன்றியுள்ள கெட்டவழக்கம். ஒரு தொழிலில் பிரவேசித்த பின் எவ்வளவு நஷ்டம்வந்தாலும், கஷ்டம் ஏற்பட்டாலும், விடாமுயற்சியுடன் சித்தியடையும்வரை திரும்பத் திரும்ப அக்காரியத்தையே செய்ய வேண்டும்.

ஸ்ரீ கண்ணன் பார்த்தனுக்குச் சொல்லுகிறார்:—"எ, அருச்சுனா! இப்பூமியானது நாடகமேடையைப் போன்றது. நீயோ அருச்சுனன் என்ற வேஷக்காரன். இப்போது யுத்தவேடம்பூண்டு போர்க்களத்தில் நிற்கிறாய்; நீ உன்னுடைய நடிப்பைச் (ஆக்டை) சரியான விதத்தில் நடிப்பிக்காவிட்டால் எல்லோரும் கை கொட்டிச்சிரிப்பார்கள். ஆகச்சே, புகழ்ச்சியை நாடு; இகழ்ச்சிக்காளாக வேண்டாம்; விடாமுயற்சி வேண்டும்; தைரியம் வேண்டும்; கோழை என்ற நாமம் பெறலாகாது; உலகம் உள்ளமட்டும் இகழ்ச்சி உனக்குக் கேவலம்; நரகத்திற்கு வழி; புகழ்ச்சி மோட்சத்திற்கு மார்க்கம்; நீ உனக்கு அமைந்த கர்மத்தைச் செய்யக்கடவாய்; நீ செய்யும் பற்றற்ற கர்மம் மேலானதை அடையச் செய்யும்."

சகோதர சகோதரிகளே! செல்வமும் ஞானமும் அடைய இடைவிடா முயற்சி வேண்டும். ஊக்கத்துடன் ஒரு தொழில் செய்யாவிடின் தனவந்தனாகமுடியாது. ஞானமானது விலைக்கு வாங்கக்கூடியதல்ல, நல்லாசிரியரை அடுத்து அவரிடம் பலநாள் உழைத்து ஞானத்தைப்பெற வேண்டும். இரண்டிற்கும் பலநாள் கஷ்டம் தேவை.

"ஊக்கமது கைவிடேல்" என்ற வாக்கியப்படி சகோதரர்களே! எழுந்திருங்கள். தூக்கம்வேண்டாம், எழுமின், விழிமின். பிரகிருதி நாம் நாடியதையளிக்கத் தயரா யிருக்கிறது.

"காக முறவு கலந்துண்ணக்
கண்டீ ரகண்டா காரசிவ
போக மெனும்பே ரின்பவெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமா
யேக வுருவாய்க் கிடக்குதையோ
வின்புற் றிடநா மினியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
சேர வாரும் செகத்தீரே"

என்ற தாயுமானவர் வாக்குப்படி, நாம்ஜெயமடைவதற்காகச்சோம்பலை விட்டு ஊக்கத்துடன் கொண்ட கருத்தை முடிவுசெய்யுங்கள். விடாமுயற்சி அவசியம். சுபம், சுபம், சுபம்.

எஸ் அயோத்திராம்
வக்கீல் குமஸ்தா, திண்டுக்கல்.

நித்தியவிதி—போஜனம்

(472-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விடத்தில் நமது ஆரியோத்தமர்கள் கண்ட ஒரு விஷயத்தைக் கவனிப்போம். காகம், சுவானம், எறும்பு, புழுவாதி ஊர்வனமுதலிய பிராணிகளுக்கும் ஆகாரம் கொடுக்கும்படி விதிக்கப்பட் டிருப்பதனால் இதை மஹா சிரேஷ்டமானதாகக் கொள்ளவேண்டும். இதனால் ஒரு கிரகஸ்தன் தன்னைப் பாபத்தினின்று விடுவித்துக்கொள்வதுந்தவிர இதர பிராணிகளையும் கரையேற்றுகிறான். இதனால் அவனுக்கு மிகுந்த புண்ணிய முண்டாகும்.

காகம் முதலிய பிராணிகள் ஆகாரத்தைக் குறித்துப் பறந்து திரிந்து கொண்டிருக்கின்றன. ஆகாரம் இடுகிற வீடுகளை மறவாமல் ஞாபகத்தில் வைத்துக்கொண்டே யிருக்கும். ஆகாரமிடும் வேளைக்குத் தவறாமல் அவ்விடம் வந்துசேரும். தமக்கு அன்னமிடும் மனிதனை நன்றாயறிந்துகொண் டிருக்கும். அவனுடைய குரலோசையையும் நன்றாயறிந்திருக்கும். பசுபட்சிகளுக்கு ஆகாரமே பிரதானம். அதையே அவை சதாகருதிக்கொண் டிருக்கும். அவ்வாகாரம் காரணமாக மனிதருடன் பழகவும், மனிதனைச்சிந்திக்கவும், அன்னமிடும் மனிதனைக் குறிப்பாய்த் தெரிந்துகொள்ளவும் அவற்றுக்குச் சக்தியுண்டு என்பதைச் சொல்லவேண்டுவ தில்லை. இதனால் காகம் நாய் முதலிய ஜந்துக்கள் தமக்கு அன்னமிடுகிற மனிதனைச் சதா சிந்தித்துக் கொண்டே யிருக்கும்.

இப்போது குறிக்கப்போகும் விஷயம் கவனிக்கத்தக்கது. யாதெனில் மரணகாலத்தில் எந்த ஞாபகம் மிஞ்சி நிற்கிறதோ அதே சொரூபந்தான் மறுஜன்மமாகும். ஜீவன் தன் வாழ்நாட்களில் எதன்மேல் அதிக ஆசை வைத்திருப்பானோ அதேபொருள்தான் அந்தியகாலத்தில் மனதில் மிஞ்சியிருக்கும். அதனாலேயே சதா தன் தெய்வத்தைச் சிந்தித்துக்கொண்டிருக்கவும், அதன் திருநாமங்களை உச்சரிக்கவும், வேதம்விதித்தது. தானே ஆகாரத்தைத்தேடித் தின்னும் காகமாதி பிராணிகள் வியாதியுற்றால் ஆகாரம் தேடமுடியாது. அப்போது ஆகாரத்தைக் குறித்துச்சிந்திக்கும்; அக்காலத்தில் ஆகாரமிட்ட மனிதனுடைய சொரூபமும் அதன் மனதில் தோற்றும். தன் அறிவுகெடும் வரைக்கும் ஆகாரத்தையும் ஆகாரமிடுகிறவனையும் நினைத்துக்கொண்டிருக்கும். மரணமடையும் போது ஆகாரமிடும் மனிதசொரூபத்தை நினைத்துக்கொண்டு பிராணனை விடுதலால் அந்தப்பிராணி மறுஜன்மத்தில்அநேகமாய் மனிதசொரூபத்தையேயடையும். அதுகாரணமாக நன்மை தீமைகளை யுணர்ந்து பந்தமறுத்து, வீடுபேற்றை யடையலாகும்.

இதற்குக் காரணம் தனக்கு அன்ன மிட்டமனிதனை மறவாம விருந்த நன்றியறிதலேயாம். ஆதலால் நன்றியறிதலென்னும் குணத்தோடு மனித ஜன்மத்தை யடையும். நன்றி யறிதலாலே பரோபகாரம் முதலிய நற்குணங்களையடைந்து சிறந்து விளங்கும். இதை உத்தேசிக்கு மிடத்தில் பூதபலி அற்பஜந்துக்களின் பந்தமறுத்து முத்திக்கு அருகமாக்குவதேயாம். இந்த புண்ணியத்துக்குச் சமானமான புண்ணியமில்லை. அற்ப ஆகாரத்தையிடுவதனால் ஈனஜந்துக்களை உயர்ந்த ஜன்மம் அடையச்செய்து தாமும் மேன்மை பெறுவதாகிய இந்தச்சிறந்த செய்கை ஆரியகுலத்தாருக்குச் சிறந்த பூஷணம் போல்வதாகும்.

உத்தரா போஜனம் செய்து மிகுந்த ஜலத்தைக் கையில்பற்றிக்கொண்டிருக்கும் ஆகாரத்தோடு கீழே விடுவதனால் எறும்பு முதலிய ஜந்துக்கள் உயர்ந்த ஜன்மத்தையடையும். தேவபக்தி, பிதிர்பக்தி, ஜீவகாருணியம், முதலிய நற்குணங்களால் சிறந்து விளங்கும் மனிதனுடைய சரீரசம்பந்தமான ஆகாரத்தைப் புசிப்பதனால் அந்த ஜந்துக்கள் சிறுகச்சிறுக மனிதகுணத்தையடையும். அதனால் அவைகள் அடுத்த ஜன்மத்தில் மனிதனாய்ப் பிறக்காவிட்டாலும் உயர்ந்த ஜன்மத்தையடைந்து ஜன்மாந்தரத்தில் மனிதவடிவம் பெறும். சீக்கிரத்தில் முத்தியும்பெறும். இதனால் அந்தணர்கள் உட்கொள்கிற ஆகாரவிஷயமும் பரோபகாரமேயாகும். இதுபற்றியே "அந்தணரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்கும் - செந்தண்மை பூண்டொழுகலான்" என்று தேவரும் புகழ்ந்து கூறினர். பிறகு கைகால் சுத்திசெய்து கொண்டு தேவனுக்கு முன்னரே அற்பிக்கப்பட்டிருக்கும் தாம்பூலந் தரித்துக்கொள்ளவேண்டும். தாம்பூலத்தின் சிறப்பு விவாகப்பிரகரணத்திலே கூறப்படும். இதற்குமேல் வைதிக கிருத்தியங்கள் விதிக்கப்படவில்லை. சூரியாஸ்தமன பரியந்தம் அந்தணர்கள் சாஸ்திர ஆராய்ச்சி செய்ய வேண்டும. க்ஷத்திரியர்கள் இராஜ்யகாரியமும், மற்றவர்கள் தங்கள் தங்களுக்குரிய தொழிலையும் செய்யவேண்டும். வேலையில்லாதவர்கள் எல்லாரும் இதிகாசபுராண காலக்ஷேபம் செய்யவேண்டும். இனிமேல் இராக்காலவிதி கூறப்படும். நித்தியவிதியில் காலைமுதல் மாலைவரைக்கும் ஆரியகுலத்தார் நடந்துகொள்ள வேண்டிய விதிகளைச் சுருக்கிக் கூறினோம். அவைகளெல்லாம் இகபரசாதகமாகவுள்ளன வென்பதை அறிவுடையோர் மறுக்கமாட்டார்கள். போஜன விஷயமும் இகபர சுகங்களுக்காதாரமாகவே விதிக்கப்

பட்டதென்பது நன்கு விளங்கும். போஜன முதலியவற்றில் இன்றியமையாத சிலவிதிகளைச் சித்தர் பெருமான் தேரையர் கூறியருளினார். அதனையும் இங்கு எடுத்துக்காட்டிப் பகற்கால விதியை முடித்திடுவோம்.

"பாலுண்போ மெண்ணெய் பெறின் வெந்நீரிற் குளிப்போம்
பகறபுணரோம் பகற்றுயிலோம் பயோதரமு மூத்த
ஏலஞ்சேர் குழலியோடிள வெயிலும் விரும்போம்
இரண்டடக்கோ மொன்றைவிடோ இடதுகையிற் படுப்போம்
மூலஞ்சேர் கறிநுகரோ மூத்ததயிருண்போம்
முதனாளிற் சமைத்தகறி யமுதெனினு மருந்தோம்
ஞாலந்தான் வந்திடினும் பசித்தன்றி யுண்ணோம்
நமனார்க்கிங் கேதுகவை நாமிருக்கு மிடத்தே."

பாலருந்த வேண்டும். தைலந் தேய்த்துக் கொண்டால் வெந்நீரில் முழுக வேண்டும். பகற்புணர்ச்சி பகல் நித்திரைகூடாது. தனக்கு மூத்தவளான பெண்ணைச்சேர்தலும் இளம் வெய்யிலிற் காய்தலு மாகாது. மலஜலத்தை யடக்குதலும் அதிகப் புணர்ச்சியுமாகாது. இடதுகையில் தலை வைத்துப் படுக்கவேண்டும். கிழங்கு வகைகளை யதிகமாகப் புசிக்கவொண்ணாது. புளித்ததயிருண்ணலாம்; முதல்நாளிற்சமைத்து மிஞ்சியிருக்கும்கறி அமுதம்போன்றதானாலும் உண்ணலாகாது. பூமிமுழுதுங் கிடைப்பதாயிருந்தாலும் நல்லபசி யுண்டானாலன்றிப் புசிக்கக்கூடாது. இவ்வாறு நடந்தால் எமனுக்கு நம்மிடத்தில் வருவதற்குக் காரணமில்லையாம்.

"உண்பதிரு பொழுதொழிய மூன்றுபொழு துண்ணோம்.
உறங்குவதிரா வொழியப் பகலுறக்கஞ் செய்யோம்.
பெண்கடமைத் திங்களுக்கோர் காலன்றி மருவோம்.
பெருந்தாக மெடுத்திடினும் பெயர்த்து நீ ரருந்தோம்.
மண்பரவு கிழங்குகளிற் கருணையன்றிப் புசியோம்.
வாழையிளம் பிஞ்சொழியக் கனியருந்தல் செய்யோம்.
நண்புபெற வுண்டபின்பு சிறுநடையுங் கொள்வோம்.
நமனார்க்கிங் கேதுகவை நாமிருக்கு மிடத்தே."

வேலி.

"ஆறுதிங்கட் கொருதடவை வமனமருந் தயில்வோம்.
அடர்நான்கு மதிக்கொருகாற் பேதியுறை நுகர்வோம்.
தேறுமதி யொன்றரைக்கோர் தரநசியம் பெறுவோம்.
திங்களரைக் கிரண்டுதரம் சவளவிருப் புறுவோம்.
வீறுசதுர் நாட்கொருகால் நெய் முழுக்கைத் தவிரோம்.
விழிகளுக்கஞ் சனமூன்று நாட்கொருகா லிடுவோம்.
நாறுகந்தம் புட்பமிவை நடுநிசியில் முகரோம்.
நமனார்க்கிங் கேதுகவை நூமிருக்கு மிடத்தே."

வமனம் = வாந்தி; சவளம் = க்ஷவரம்; சதுர்நாள் = நாலுநாள்.

"பகத்தொழுக்கு மாதரசங்கரந் துடைப்ப மிவைதாட்
படநெருங்கோந் தீபமைந்தர் மரநிழலில் வசியோம்
சுதப்புணர்ச்சி யசனபச னத்தருணம் செய்யோம்
தின்சலுண விரும்பலஞ் சையோக மழுக்காடை

வகுப்பெடுக்கிற் சிந்துகச மிவைமாலை விடுப்போம்
வற்சலந் தெய்வம்பிதுர் சற்குருவை விடமாட்டோம்.
நகச்சலமு மூளைச்சலமுந் தெறிக்குமிட மணுகோம்
நமனார்க்கிங் கேதுகவை நாமிருக்கு மிடத்தே."

தூரஸ்திரீ ஆடு கழுதை துடைப்ப மிவற்றின்புழுதி மேலே படும்படி இட்ட நெருங்கக் கூடாது. விளக்கு மனிதர் மரம் இவற்றினிழலிலுட் காரக்கூடாது. உண்ட உணவு ஜீரணமாகிற வேளையிற் புணரக்கூடாது. மாலைப்போதில் தூங்குதல் உண்ணல் புணர்ச்சி இவற்றை செய்யக்கூடாது. அழுக்கு வஸ்திரந்தோய்ந்த நீர் மேலேபடக்கூடாது. தெய்வம் பிதுர் குரு இவர்களை மறக்கக்கூடாது. மற்றவை வெளி.

"திரவியவூழ் தில்லுணர்ந்தே தின்றனுப விப்பார்
பரவியநோய் காணாராய்ப் பால—ரிரவியை நேர்
மெய்யங் களித்திடுகோன் மிக்காயுள் பெற்றீரேழ்
வையங் களிக்க வாழ்வார்."

யதார்த்த குணங்களையும் அவற்றைப் புசிக்குங் கால பேதங்களையு முணர்ந்து புசிப்பவர் நோயில்லாதவராய், மலைபோன்ற வலிய சரீரத்தை யடைந்து புத்திரர்களைப் பெற்றுப், பிரமதேவனைப்போல் நீடித்த ஆயுசு டையவர்களாய்ப் பதினாலு உலகமும் புகழவாழ்வார்கள். சுபம்.

பகல்விதி முற்றும்.

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

ஆத்திசூடி உதாரணக் கதைகள்.

(4-ஆம் தொகுதி 462-ம் பக்கத்தொடர்ச்சி)

"ஐயமிட்டுண்."

"ஐயமிட்டு-பிச்சையிட்டு, உண் - (பின்பு ஆகாரத்தைச்) சாப்பிடு" என்பது இதன் பொருள்.

பொன்னகர மென்ற ஓர் ஊரில் வேளாளர்வகுப்பைச் சேர்ந்த சுப்பிரமணியன் என்னும் பெயரையுடைய ஒருவனிருந்தான். இவன் ஆசிரியரிடம் கல்விபயின்றுவருங் காலத்தில் "ஐயமிட்டுண்" என்னும் ஔவை திருவாக்கை விசேஷமாக ஆசிரியர் இவனுக்குப் போதித்துப் பசித்துவந்தார்க்குத் தடையின்றி அன்னமிடவேண்டுமென்று மிகவும் வற்புறுத்திச் சொல்லி வந்தார். அவர் அவ்வாறு போதித்து வந்தும் சுப்பிரமணியன் மிகவும் உலோபகுணமுடையவனாதலால் அந்த ஆசிரியர் வசனத்தை மனத்திற் கொள்வதில்லை. "கண்டவர்க்கெல்லாம் அன்னமிடுவதால் நமக்கென்ன லாபம்? கையிலுள்ள பொருள்தானே செலவழிந்துபோகும்; பிச்சைக்காரருக்குப் போடும்சோற்றை வைத்திருந்தால் அது நமக்கு மற்றொரு வேளைக்குதவும்" என்று இவன் எண்ணிவந்தான். அதனால் இவன் பருவமடைந்து கலியாணஞ் செய்து குடும்பஸ்தனாகி விட்டபின்பு எவருக்கும் பிச்சையிடுவதே யில்லை; வீட்டுக்குவந்த விருந்தினருக்கும் அன்னமிடுவதில்லை; சுற்றத்தாரையும் ஆதரிப்பதில்லை; எவரேனும் பிச்சைக்காரர் தன்

வீட்டுவாயிலில் வந்தால் நாய்போற் சீறி அவர்களைத் துரத்துவான்; விருந்தினர்வந்தால் வெடுவெடென்றுபேசி அவர்கள் சொல்லாமல் திரும்பியோடும்படி செய்வான்; சுற்றத்தாரைக் கண்டால் சற்றும் அன்பு பாராட்டமாட்டான்.

இவன் இவ்வாறு கடின சித்தமுடையவனா யிருந்ததினாலே இவன் மகாபாபி என்றபெயர் ஊரெங்கும் பரவிப் போயிற்று; அதனால் இவனுடைய வீட்டிற்கு ஒருவருமே வருவதில்லை; இவனுடைய வீட்டில் என்ன விசேஷ காரியம் நடந்தபோதிலும் இவனும் இவன் மனைவியுமே யிருந்து அதனை நடத்தக் கூடியவர்களா யிருந்தார்கள்; ஒரு பரதேசியுங்கூட இவனுடைய பேரைக் கேட்டால் மிகவும் நிந்திப்பான்.

இவ்விதமான பேருடனே சுப்பிரமணியன் வாழ்ந்து வருங் காலத்தில் ஒரு தினம் திடீரென்று இவனுடைய மனைவி வியாதிகண்டு இறந்துபோய் விட்டாள்; இவன், மனைவி பக்கத்தில் குந்தி அழுதுகொண்டு எவரேனும் தனக்குத் தேறுதல் சொல்வார்களென்றிருந்தான். இவன் வீட்டில் இழவு விழுந்தது தெரிந்திருந்தும் அவ்வூரார் ஒருவருமே அங்குவரவில்லை. அதனால் இவன், "இதென்ன ஒருவரும் வரவில்லையே" என்று ஊருக்குட் போய்ச் சிலரைத் தானே கூப்பிட்டுப் பார்த்தான். ஒவ்வொருவரும் முகத்தைத் திருப்பிக்கொண்டு ஒன்றும் பதில் சொல்லாமல் போய் விட்டார்கள். அதன்மேல் இவன் விசனங்கொண்டு, "என்ன செய்கிறது எப்படியாவது பிணத்தை யெடுத்து அடக்கஞ் செய்ய வேண்டுமே" என்று தோட்டியைப்போய்க் கூப்பிட்டான். அவன், "போ! போ!! மகாகெட்ட கர்மியாகிய உன் காரியத்திற்கு எவர் வருவார்கள்," என்று சொல்லிவிட்டான். பண்டாரத்தைக் கூப்பிட்டான்; அவனும் வரவில்லை. அதன்மேல் இவன் என்ன செய்வான் பாவம்! இவனால் ஒன்றுஞ் செய்ய முடியவில்லை; பின்னர் இவன் பக்கத்து ஊருக்குப்போய்க் கூலி கொடுத்து நாலைந்து மனிதர்களைக் கூட்டிக்கொண்டு வந்து அவர்களுடைய உதவியால் பிணத்தைத் தூக்கிக்கொண்டுபோய்ச் சுடுகாடு சேர்த்துவிட்டுத் திரும்பி வந்து தனியே தன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தான். ஒருவராவது "ஏனப்பா இப்படி யழுதுகொண் டிருக்கிறாய்" என்று கேட்கவே யில்லை. அந்த நிலைமை இவனுக்கு மிகவும் மானக்கேடாயிருந்தது. அப்பொழுது இவன் "ஏனிப்படி நமக்கு எல்லோரும் விரோதிகளானார்கள்" என்று யோசித்தான். தன்னுடைய உலோப குணமே இவ்வித நிலைமையை யுண்டாக்கிற்று என்பது இவனுக்கு விளங்கிற்று: உடனே இவன் "சீ! சீ!! உலோபகுணம் மிகவும் கெட்டது; 'ஐயமிட்டுண்' என்பதை ஆசிரியர் நமக்கு உபதேசித்தும் நாம் அதனை அவமதித்து உலோபத்தைக் கைக்கொண்டதால் நமக்கு இக்கதி நேர்ந்தது. மனிதர்கள் செய்த பாவ புண்ணியங்களுக்குத் தக்க பயன்களை மறுசென்மத்தில் அனுபவிப்பார்கள் என்று சாஸ்திரங்கள் கூறினபோதிலும் நாம் பிச்சை இடாததினால் ஏற்படும் பலனை நேரில் கண்ணாரப்பார்த்து விட்டோம்; இனி இப்படி இருத்தல் கூடாது; நம்முடைய ஆசிரியர் வார்த்தையைத் தெய்வவாக்காகக் கருதி நடக்க வேண்டும்" என்று உடனே ஊராரிடம் போய் அவர்கள்காலில்விழுந்து "நான்செய்ததெல்லாம் தவறுதான்; ஆயினும் மன்னிக்க வேண்டும்; இனி நான் அவ்வாறு கடின சித்தமுடையவனா யிருக்கமாட்டேன்; நீங்கள் இனிமேல் என்மீது அன்பு பாராட்டவேண்டும்" என்று மிகவும் வணங்கிக் கேட்டுக் கொண்டான்.

அதன்மேல் அவர்கள் இவன்மீது சற்று கிருபை செலுத்தினார்கள். இவனும் பிச்சையிடுதல் முதலிய தானதருமங்களைச் செய்து நல்லபேரெடுத்தான். ஆதலின் நாம் ஒவ்வொருவரும், "ஐயமிட்டுண்" என்னும் ஔவை திருவாக்கைக் கடைப்பிடித் தொழுகுவோமாக. (தொடரும்)

S. V. ஆறுமுகன்.

தெய்வ தூஷணை.

நம்தென்னாட்டில் உண்டான மதங்களில் சைவமதமும் விஷ்ணுமதமும் மிகவும் பிரசித்தி பெற்றவை. தற்காலம் கிரிஸ்தவர் மகம்மதியர் பார்சீகர் முதலிய மதஸ்தர்களைப்போலவே இவர்களும் தங்கள் மதங்களை முன்னுக்குக்கொண்டு வருகிறதாக அநேக இடங்களில் சபைகளை யேற்படுத்தி யிருக்கிறார்கள். தங்கள் மதத்தைப்பற்றி அடிக்கடி உபந்நியாசமும் செய்கிறார்கள். ஆனால் சைவர்கள் விஷ்ணுவையும் வைஷ்ணவர்கள் சிவனையும் நிந்தித்து உபந்நியாஸம் புரிந்து தங்களது சகோதரபாவத்திற்கு விரோதம் உண்டுபண்ணிக் கொள்கிறார்கள். சில இடங்களில் கலகம் முதலியதும் உண்டாகி கோர்ட்டு மூலமாய் நியாயம் கிடைக்கச் செய்கிறார்கள். எவ்வளவு கல்விவாய்ந்த மேதாவியாயிருந்தாலும் தெய்வ தூஷணை செய்வதில் பின்வாங்குவதில்லை. ஐயோ பாவம் "ஹரியும் சிவனும் ஒண்ணு அறியாதவன் வாயில் மண்ணு" என்றுகூட ஓர் பழமொழி உண்டு என்று நமக்கு ஞாபகம் வருகிறது. அவ்வாறு தூஷணை செய்யும் நம் சகோதரர்களுக்கு அவ்வாறு செய்யாதபடி, மனம்தான் இதற்குக் காரணம் என்பதற்கோர் உதாரணமாக ஓர் பக்தருடைய கதையை இங்கு எழுதுகிறோம். என தருமை சைவ வைஷ்ணவ சகோதரர்கள் கவனிக்குமாறு, தெய்வதூஷணை செய்வோர் படு நரகடைந்துழல்வீர் என்று நினைப்பூட்டி நம் கதையை ஆரம்பிக்கின்றோம். நம் ஆனந்தன் இடங்கொடுப்பானாக.

விஷ்ணு க்ஷேத்திரமாகிய பண்டரிபுரத்தில் நரஹரி என்ற ஓர் பொற்கொல்லர் இருந்தார். அவர் ஒவ்வொருநாளும் அதிகாலையில் எழுந்து நதியில் ஸ்நானம் செய்து நித்ய கருமங்களை முடித்து பக்தியுடன் மல்லிகேஸ்வரரைப் பூஜைசெய்துகொண் டிருந்தார். இவர் சிவனைத் தவிர வேறே கடவுளைக் கனவிலும் கருதினவரல்லர். சமது ஜனன பூமியாகிய பண்டரிபுரத்திலிருக்கும் ஸ்ரீ விட்டலநாதனை நினையார். அவர் இருக்கும் திக்கையும் திரும்பிப்பாரார். இப்பேர்ப்பட்ட வைராக்கிய சீலரின் வீட்டுப்பக்கத்திலிருந்த ஓர் வர்த்தகன் தனக்கு சந்தானம் இல்லாமையால் ஸ்ரீமத் பாண்டுரங்கன் சந்நிதிக்கு வந்து பகவானை அநேக நாமங்களால் ஸ்தோத்தரித்து 'ஏ பண்டரிநாதா! நீ எனக்கொரு புத்திரன் அநுக்கிரகித்தால் உனக்கு நவரத்தினமான ஓர் பொன் னரைஞாண் ஸமர்பிக்கின்றேன்' என்று பிரார்த்தனை செய்து கொண்டான். பிறகு விட்டலநாதனின் கிருபா கடாக்ஷத்தால் அவ் வர்த்தகனுக்கு ஓர் புத்திர சந்தானம் உண்டாயிற்று. நம்மவர் மதாசாரப்படி சூதகம் கழிந்தவுடனே வர்த்தகன் புண்டரீகவரதன் ஸந்நிதிக்கு வந்து வணங்கி தன் பிரார்த்தனையைச் செலுத்த வேண்டுமென்று எண்ணி அரை ஞாண் செய்யவல்ல ஓர் பொற்கொல்லரை விசாரிக்க நாம் மேலே சொல்லிய நரஹரி என்றவரே அரைஞாண் செய்வதில் வல்லவராக இருந்தார்.

உடனே வர்த்தகன் சந்தோஷமடைந்து பொன்னையும் நவமணிகளையும் எடுத்துக்கொண்டு நரஹரி வீட்டுக்கு வந்து பண்டரி நாதனுக்கு அரைஞாண் செய்து தரவேண்டுமென்று கேட்டான். அதற்கு நரஹரி வர்த்தகனை நோக்கி, 'நான் பண்டரிநாதனைப் பார்த்தறியேன்; நீ அளவு தந்தால் நான் செய்து தருகிறேன்' என்று சொன்னார். அதன் பேரில் வர்த்தகன் ஸ்வாமி ஸந்நதிக்கு வந்து அளவெடுத்துக் கொண்டுபோய்க் கொடுத்தான். நரஹரி அந்த அளவின்படியே சில தினங்களுக்குள் வேலையை முடித்துக் கொடுத்தார். அவ் வரைஞாணை வர்த்தகன் வாங்கிக்கொண்டுபோய் ஸ்வாமிக்கு சமர்ப்பித்தான். பார்த்த அளவில் அரைஞாணானது நான்கு விரற்கிடை குறைவாயிருந்தது. அதைப்பார்த்து வர்த்தகன் மனம் திகைத்து மறுபடியும் நரஹரி கையிற் கொடுத்து சரிப்படுத்தி திரும்ப ஸ்வாமி ஸந்நிதிக்கு வந்து வெகுபயபக்தியுடன் ஸ்வாமிக்கு அணிந்து பார்க்கையில் இரண்டுவிரற்கிடை அதிகமாக இருந்தது. இப்படி ஐந்தாறுமுறை குறைந்தும் அதிகமாகவும் இருக்க வர்த்தகன் மனம் வருத்தமடைந்து நரஹரி வீட்டிற்கு வந்து 'எத்தனைமுறை சரிப்படுத்தினாலும் அளவு ஏறியுங் குறைந்தும் இருப்பதால் ஸ்வாமிக்கு அரைஞாண் பிடிக்கவில்லை. ஆகையால் நீயே வந்து உன் கையால் அளவெடுத்துக்கொண்டு வந்து செய்துதரவேண்டு' மென்று மிகவும் மன்றாடிக்கேட்டான்.

நரஹரி, சிவனைத்தவிர மற்றகடவுள்களைப் பார்க்கவும் நினைக்கவும் கூடாதெனக் கருத்துக்கொண்டவராதலால், முதலில்வர மறுத்தும் பிறகு வர்த்தகனின் பரிதாபமான வேண்டுகோளுக்கிரங்கித் தம்கண்களைத் துணியால் மூடி அவ்வர்த்தகன் கையைப் பிடித்துக்கொண்டு ஸ்ரீபாண்டுரங்கன் சந்நிதானத்திற்கு வந்தார். அப்போது அங்கிருந்தார் அனைவரும்பார்த்து, 'ஐயோ இதுஎன்ன விந்தை! நோயாளிக்கு அன்னம் வெறுப்பா யிருக்கிறதுபோல் இந்த நரஹரிக்குப் பகவான் சேவை வேப்பங்காயாக இருக்கிறது' என்று பேசிக்கொண்டு இருந்தார்கள். நரஹரி அவைகளைக்காதில் போட்டுக் கொள்ளாதவராய் ஸ்ரீ பாண்டுரங்கன் ஸந்நிதிக்குள் நுழைந்து பகவான் சமீபத்திற்போய்த் தமது கரத்தால் ஸ்வாமியைத்தடவிப்பார்த்தார். பார்த்தவுடனே மூர்த்தம் மான்மழு சதுர்ப்புஜ கர்ளகண்ட திரிநேத்திரதாரியாய் பஞ்சமுக வியாக்கிரமசால சூலடமகரங்கள் தென்பட்டன. அப்போது நரஹரி ஆச்சரியமடைந்து 'இந்தப் பண்டரிநாதனை விஷ்ணுவென்று எண்ணியிருந்தோமே; இப்போது சிவவுருவம் அகப்படுகின்றதே' என்று எண்ணிக் கண்ணைக்கட்டியிருந்த துணியை அவிழ்த்து ஸ்வாமியைப் பார்த்தபோது தாம் தடவிப் பார்த்ததுபோ லல்லாமல் அதற்கு முன் கேட்டிருந்தபடி வைரமுடியும் மகரகுண்டலங்களும் ஸ்ரீ வத்ஸல கௌஸ்துவாபரணங்களும் வைஜயந்தி வனமாலைகளும் பீதாம்பரமும் இடுப்பில் ஊன்றிய இருகரங்களும் உபய திருவடிகளும் பிரகாசித்துக் கொண்டிருக்கக் கண்டு, "எனக்கேன் இப்பேர்ப்பட்ட மயக்கம் உண்டாகியது" என்று மறுபடியும் கண்களைத் துணியால் மூடித்தடவிப்பார்க்கையில் முன்போலவே சிவ சின்னங்கள் தென்பட நரஹரிக்கு பகவானைத் தொட்டதின் காரணமாக பூர்வ கர்மம் நீங்கி ஞானம் உதயமாகி, 'ஸர்வேஸ்வரனுக்கு நாமரூபங்கள் அநேகமாக இருக்க எனது மந்தபுத்தியால் ஸ்ரீவிட்டலநாதனை சேவிக்காம லிருந்துவிட்டேனே' என்று அவர் மனம் வருந்தி ஸ்வாமிக்கு சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து வணங்கி அநேகவிதங்களாக பரமசிவ விஷ்ணு நாமங்களால் துதித்து ஆனந்தக் கூத்தாடி அன்றுமுதல் பேதபுத்தியை விட்டொழித்துச் சிறந்த சிவ வைஷ்ண பக்தரானார் என்று பக்த விஜயத்தில் கூறப்பட்டிருக்கிறது. மேலும்,

“பாதியா யழுகியகால் கையரேனும்
பழிதொழிலு மிழிகுலமும் படைத்தா ரேனும்
ஆதியாய் அரவணையாய் என்பா ராகில்
அவரன்றோ யாம்வணங்கும் அடிக ளாவார்
சாதியான் ஒழுக்கத்தால் மிக்கோ ரேனும்
சதுர்மறையால் வேள்வியால் தக்கோ ரேனும்
போதினான் முகன்பணியப் பள்ளி கொள்வான்
பொன்னரங்கம் போற்றாதார் புலையர்தாமே.”

என்று ஆன்றோர் அருளியுளர்.

என்றபடி பறையனாயினும் பக்தனாயின் பிராமணனைவிட மேலானவனாவான். பக்தியில்லாதவன் பிராமணனானாலும் பறையனிலும் தாழ்ந்தவனாவான். மேலும், பகவான் “அவனவன் நினைப்புக்குத் தக்கபடி காக்ஷிதந்து மோக்ஷம் கொடுக்கிறேன்” என்கிறான். மேலும் இவ்விருபதாம் நூற்றாண்டிலும் மதபேத முடையோர் ஒவ்வொருவரும் தம்தம் மதத்தையே மேலாகச் சொல்கிறார்கள். உண்மையில் அப்படியில்லை.

“தப்பினையே எண்ணுவார் தந்தப்பை எண்ணார்கள், என்றுமிது மண்ணிலே நின்ற வழக்கு” என்றபடி, தாம் கொஞ்சம் கற்றதினாலேயே தமக்குச் சகலமும் தெரிந்துவிட்டது என்று மமதை கொண்டு திரிவார்போல் இராமல், அவரவர்கள் தம்தம் சமயக் கோட்பாட்டைத் தெளிவுறக் கற்றறிந்து தம் சமயத்தை முன்னாக் கொண்டு ஒழுகவேண்டுவதே முறைமையாயினும், பிறர் தெய்வம் பிறர் மதங்களைத் தூஷிக்காமலிருப்பதே அறிவாளிகளின் தன்மையாகும்.

G. S. A. வேங்கட்டராமன்
மதுரகவி ஆழ்வார் சபை, ஆத்தூர்.

ஆனந்தபோதினியி னருமை

சிலையெடுத்தே யரக்கர்குலச் சிரமறுத்துத்
தேர்விசயன் றனக்கெளிய பாகனாய்மால்
மலையெடுத்து மழைதடுத்து மண்ணளந்து
மற்றுருவம் பலவெடுத்த தவனிக்கேபோல்
கலையடுத்து முனிசாமி கற்றோர்கள்
கல்லாதார் தமிழ்க்கடலிற் செல்ல நாவாய்
நிலைவிடுத்த வானந்த போதினியே
நீடூழி காலம்வரை நிகழ்கமாதோ.

திருப்பாற்கடலிற் சயனித்துவரும், திரிமூர்த்திகளில் ஒருவனாயும் ஜெகத்நாதனாயுமுள்ள ஸ்ரீமந் நாராயணன் தசாவதாரங்களிலும் வெவ்வேறு நாம ரூபங்களாகத்தோன்றி அப்போதைக்கப்போது பக்கத் துணைகளாலும் தனியாகவும் சுயநலங்கருதாது உலக நன்மைக்காகவும் பரோபகாரமாகவுமே துஷ்டநிக்ரக சிஷ்ட பரிபாலனஞ் செய்தாரென்பதை யாவரும் மறுக்கமாட்டார்கள். தொன்று தொட்டு வழங்கிவந்த நம் தாய்ப்பாஷையானது இப்போது குறைந்து மயங்கி யிருப்பதை நோக்குங்கால் இது எவ்விதமிருக்கிற தென்றால், செழித்தோங்கி வளரக்கூடிய பயிரை, பயிரிடுவோன் கவனியாதிருந்தால் யாதொரு பலனுமளிக்கச் சக்தியற்ற களையானது அதனை மூடிக்கொள்வதுபோல், இத்தாய்ப்பாஷையினூடே அன்னிய

பாஷைகள் பிணைப்புற்றதினால் இது பிரகாச மழுங்கியிருக்கின்றது. அதனால் மதாச்சாரம் மறந்து ஜாதியாச்சாரம் குறைந்து நயவஞ்சகம், நம்பிக்கைத்துரோகம், மது அருந்தல், முதலிய துர்க்குணங்கள் நிறைந்து, ஆதியந்தந் தெரியாது நம்மவர் திண்டாடும்படி நேரிட்டது; ஆதலால், பயிரிடுவோன் பலனடையக் கருதி உடனுக்குடன் களையைத் தலை காட்டாது பறித்தெறிந்து எவ்வாறு போதுமான பலனடைந் தானந்திப்பானோ, அத்தன்மைபோலவும், மேற்கூறியபடி மூன்று சாமிகளில் ஒருசாமி செய்த நன்மைபோலவும் நமது கனம் முனிசாமி முதலியாரவர்கள், நாமும் நம் சந்ததியாரும், தாய்ப்பாஷையா லினிமேலேனும் முன்னேற்றங் கொள்ளவும், மற்ற அனாச்சாரங்களை வேரறக் களையவும் பல புராணங்களையும் சாஸ்திரங்களையு மெடுத்து ஓர் மரக்கலமாகச் செய்து அதற்கு "ஆனந்தபோதினி" என்னும் நாமகரணஞ்சூட்டி அதில் அறிதற்கரிதானதும் அளவிடப்படாததுமான பொருள் நான்கையும் சரக்காக ஏற்றி, இனிமையான வியாசங்களைப் பாயாகவிரித்துப் பொறிக ளைந்தையும் துவஜங்களாக நாட்டி இத்தமிழ்க்கடலெங்கு முலாவிவரும்படி அதனைச்சென்ற நான்குவருடகாலமாய் அனுப்பியதுபோல், இந்த ஐந்தாவதுவருடமும் அது தனது தோரணங்களைப் பிரகாசிக்கச் செய்து ஒவ்வொருவருடைய கரதலத்திலுமேறி யிருதயத்தினுள் ளமர்ந்து செவிக்குணவாகிய ஆனந்தத்தைப் போதிக்குமாறு உதவி புரிந்துவருகின்றார். அன்றியும் "மடல் பெரிது தாழை மகிழினிது கந்தம் உடல் சிறியரென்றிருக்க வேண்டாம்" என்று ஔவைப்பிராட்டியார் கூறியதுபோல் நம தானந்தனுடல் சிறிதாயினும் தன்னுள் ளடக்கியிருக்கும் பொருள் பெரிதாம். இந்தவிலைமதிக்கக்கூடாப் பொருளைத் தனித்தனியே விலைகொடுத்துவாங்கி அனுபவித்துச்சுகமடைவோமென்றால் நமக்கு ஆயுளுமாஸ்தியும் போதாவென்பது திண்ணம். சுருக்கமாகக் கூறும் பக்ஷத்தில் தந்தை மக்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளும் மக்கள் தந்தைபால் நடந்து கொள்ளவேண்டிய முறையும் பலவாறிருப்பினும் தெய்வீகத்தன்மை பொருந்திய திருவள்ளுவநாயனார் தமதருள் வாக்கால்,

"தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

என்றபடி தந்தை மக்களுக்குச் செய்ய வேண்டிய நன்றியையும்,

மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்"

என்றபடி தந்தைக்கு மக்கள் செய்யு முதவியையும் யாவர்தா மறியாதார்? எனினும் தந்தையானவன் தம்மக்கள் எவ்விதத்தும் மேன்மையடையக் கருதிப் பற்பலபிரயாசைகளை யெடுத்துக் கொள்வ துலகியற்கை. மக்களோ நாயனார் வாக்குக்கு நேர் விரோதமாய் நடப்பவர்களே. ஆயினும் அப்படி எல்லோரும் நடக்கின்றார்களென்று சொல்வதற்கிடமில்லை. ஏதோ அவ் வேதவாக்கியத்தின்படி நடப்பவர்களுமுண்டு. நாம் நேரில் கண்டகாக்ஷி: அதாவது: "தந்தை சொன்மிக்க மந்திர மில்லை" என்ற முதுமொழிப்படி, தந்தையைக் காட்டிலும் பதின்மடங் கதிகமாய்ப் புத்தி புகட்டிவரும் நமது ஆனந்தபோதினி சந்தாதாரர்களில் சிலர் பற்பல விடங்களில் உபயன்யாசம் செய்தற்பொருட்டு ஆனந்தனிலுள்ள வியாசங்களையே தாம் கூறியதாயில்லாமல் ஒரு பெரியோரா லெழுதப்பட்ட புத்தகத்திலிருந்து கூறினோமென்று சொல்லி முடித்தார்கள். இவர்களன்றோ தங்குலத்தின் மகிமையும் தந்தையினருமையும் தம் பெயரையும் விளக்கிக்

காட்டுகிறவர்கள். இவர்களன்றோ நமது தாய்ப்பாஷையைக் கைவிடாது ஆனந்தபோதினியி னருமையையும் பிரகாசிக்கச் செய்கிறவர்கள். எமதன் பார்ந்த சகோதர சகோதரிகாள்! நாமும் நம் சந்ததியாரும் இனிமேலாகிலும் இத்தமிழ்க் கடலின் கரையேற வேண்டுமென்றும், ஆனந்த னிதுவரை சிறிய வயதானதின்ல் சிறிய உடலோ டிருந்ததுபோலிராது, வயதேற வுருவமும் வளரவேண்டுமென்றும், அணுவுக்குளணுவா யெங்கும் வியாபித் திருக்கும் கருணாநிதியாகிய பரம்பொருள் திருவருள் புரியுமாறு அவரைத் துதிப்போமாக.

பொ. ஆ. அய்யப்ப ரெட்டியார்.
கர்ணம், நெடுங்குளம்.

ஆனந்த போதினி பத்திரிகாசிரியரவர்கட்கு:—

அன்பார்ந்த சந்தாநேயர்களி லொருவனாகிய 7872 நெ. T. J. ரெங்கநாதய்யங்கார் எழுதிக் கொண்டது:—

யான் தங்கள் சஞ்சிகைக்கு மூன்றாம் வருடமுதல் சந்தாதாரனாய்ச் சேர்ந்திருக்கிறேன். யான் சென்ற வருஷத்தில் தங்கள் விருப்பின் படியே மணியார்டர் மூலமாய்ப் பணத்தையனுப்பி விட்டேனெனினும், நாளது வருஷத்தில் வி. பி. மூலமாகவே பெற நேர்ந்த சில அஸந்தர்ப்பங்கட்காக வருந்துகிறேன். யாரோ சிலர் "சந்தாதாரர் அதிகமாய் விட்டதால் தாங்கள் இலட்சியம் செய்யவில்லை- தங்கள் அக்கறைக் குறைவாலோ-தங்கள் குமாஸ்த்தாக்களின் முட்டாள் தனத்தாலோதான் ஸஞ்சிகை வந்து சேரவில்லை" என்று எழுதி யிருப்பதாகக் கூறுகிறீர்கள். இதற்காகத் தாங்கள் சிறிதும் மனம் வருந்தலாகாது. தங்களைக் குறை கூறுவோரின் அக்கறைக் குறைவாலேயே அவர்கட்குச் சஞ்சிகை சரியாகக் கிடைப்பதில்லை யென்பதுண்மை யென யான் உறுதி கூறுவேன்.

யான் மூன்றாம் வருஷமுதல் நாளது வரையில் ஒரு சஞ்சிகையையேனும் தவறப்பெற்றது கிடையாது. இத்தகைய குறைந்தசந்தாவில், இவ்வளவு ஒழுங்காக, இக் காலத்தில் நடந்துவரும் விதம் யாவருக்கும் ஆச்சரியத்தையே யுண்டாக்கும். இவ்வூரில் உள்ள P. ராமனுதய்யர் என்ற என் நண்ப ரொருவர் ஓர் தமிழ் மாதாந்தச் சஞ்சிகை (அதன் பெயரைக் கூற எனக்கு இஷ்டமில்லை; வேண்டுமானால் தெரிவிக்கத் தயார்) வரவழைக்க எண்ணி வி. பி. யனுப்ப மானேஜருக்குக் கடிதம் எழுதினார். வி.பி. யையும் பெற்றார். சஞ்சிகையோ, நமது ஆனந்தனைப் போன்ற உருவத்தில் 32-பக்கங் கொண்டது. சந்தாவோ ரூபா ஒன்று. பெயரோ மாதாந்தச் சஞ்சிகை. வருவதோ மூன்று அல்லது நான்கு மாதத்திற் கொருமுறை மூன்று அல்லது நான்கு சஞ்சிகைகள். இப்பொழுது நாலைந்து மாதமாக சஞ்சிகை வரவேயில்லை. இத்தகைய பத்திராதிபர்களெல்லாம் எதற்காகத் தலையெடுத்திருக்கிறார்களோ- தெரியவில்லை. என் நண்பனே என்னைப் பார்த்துப் பொறாமைப் படுகிறான். ஏனெனில், நான் தான் அவனிடம் 'நான் ஆனந்த போதினி சஞ்சிகை வரவழைக்கிறேன்; நீ இதை வரவழை' என்று சொல்லி அவன் பெயருக்கு அச் சஞ்சிகைக்குக் கடிதம் எழுதியது. இவற்றை யெல்லாம் பார்க்கும்பொழுது தங்கள் சஞ்சிகையின் மேன்மையை யறியாதார் மூடரே யாதலால், தாங்கள் கிஞ்சித்தும் வருந்தலாகாது. தயவு செய்து 5-ம் வருஷ ஸஞ்சிகையை வி. பி. யில் அனுப்புமாறு கோருகிறேன்.

T. J. ரெங்கநாதய்யங்கார், ஒக்கநாடு.
25-6-1919 — ஊரட்டநாடு சத்திரம் போஸ்டு, தஞ்சாவூர்.

மாணவர் பக்கம்

"ஙப்போல் வளை"

இவ்வருமைத் திருவாக்கியம், சந்தமிழ்நா டியற்றிய நற்றவப் பேற் றாற் றோன்றி, கன்மம் ஞானமென் றிருவகைத்தாய பெற்றியோர்க்குற்ற பெறலரும் நீதிகளைப் பெரியார் சிறியாரென்னும் பேதமொன்றின்றி யாவர்க்கு மொருபடித்தா யுபகரித்துப் போந்த, ஔவைப் பிராட்டியாரருளிய நூல்களிலொன்றாய ஆத்திசூடியிலுள்ள தென்பதை யாவரு மறிவர். பாடசாலைகளில் முதல் வகுப்புப் பாலர்களுக்குக் கற்பிக்கப்படுகின்ற இந் நன்னூல், தொல்காப்பிய முதலா நல்காப்பியங்களையும் ஐயந்திரிபறக் கற்ற ஆன்றோரும், அதிசயிக்கத் தக்க அந்தர பாகியார்த் தங்களைப் பெற்று, ஆங்கிலேயர்களாகிய டாக்டர்ஜோன், ரேவரண்டு பிஸ்ஸெட், ஸட் ஜென் (Dr. Jhone, Rev. Bisset and Sudgen) என்பவர்களாலும் மற் றும் ஜெர்மானியர் முதலிய மேல்நாட்டாராலும் வியப்புடன் தங்கள் தங் கள் பாஷைகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது.

தேவர்குறளும்—திருமால் குறளாகி ஞாலமுழுது மீரடியால் அளந் தாங்கு, வையத்தாருள்ளுவ வெல்லாம் ஈரடியா லளந்த குறளும்—அணு வைத்துளைத் தேழ்கடலைப் புகட்டிக் குறுகத்தறித்த குறளும்—இதற்கோர் விருத்தியுரையேயா மென்றியம்பலாமெனின், இதனதருமையை யளவிட யாவரே வல்லார்.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த நூலிலுள்ள இச்செய்யுள்; ங - போல்- வளை- என்னும் மூன்று பதங்களான் முடிந்தது. ங-ஓரெழுத்து, போல்- உவமவுருபு, வளை = வளையாய் என்பது 'ஆய்' விகுதி புணர்ந்துகெட்ட ஏவலொருமை வினைமுற்று. இதன்பொருள், ங போல் = ங என்னும்எழுத் தைப்போல,வளை = தழுவு,என்பதாம். 'ஙகரத்தைப்போல உன்சுற்றத்தாரை ஆதரித்துத் தழுவிக் கொண்டிரு,' என்பது இதன் தேர்ந்த கருத்தாம். இதில் ங-உபமானம்-ஙகரத்தைப்போல, அதாவது, ஙகரமானது தான் பிர யோஜனமுள்ள எழுத்தாயிருந்து பிரயோஜன மில்லாத தன் இனத்தையும் தழுவுதல் போல என்க.

அஃதெங்ஙனே யெனின், தமிழிலக்கணத்தில் உயிரெழுத்துக்கள் அ. ஆ. இ. ஈ. முதலிய பன்னிரண்டு. மெய்யெழுத்துக்கள் க். ங். ச். ஞ். முதலிய பதினெட்டு. உயிரும் மெய்யுமாகிய இவைகளின் சேர்க்கையால் க்+அ=க, ங்+அ=ங முதலிய 216 உயிர் மெய்கள் உண்டாகின்றன. இவ்வகையால் ஙகர உயிர்மெய்யெழுத்துக்களும், ங. ஙா. ஙி. ஙீ. ஙு. ஙூ. ஙெ. ஙே. ஙை. ஙொ. ஙோ. ஙௌ. எனப்பன்னிரண்டாகும். ஆயினும், இவற்றுள் முதலாகிய 'ங' ஒன்றே பாஷைக்கு உபயோகமாவதன்றி, ஏனைய பதினொன்றும் பயன்படுவதின்று. ஆனால் அவைகள் தமிழ்ப்பாஷையி லிருக்கின்றன. 'ங' ஒன்றும் பிரயோஜனப்படாவிட்டால், நாம் அவைகளை யறியவே மாட்டோம். இதனால் ஙகரமானது தானே சிறிது பிரயோ ஜனமா யிருந்துகொண் டிருக்கையிலும் பிரயோஜனமற்ற தன் இனமாகிய ஙா. ஙி. ஙீ. முதலியவைகளை எவ்வாறு தழுவிக்கொண் டிருக்கின்ற தென் பது தெரிகிறது.

இதைப்போலவே ஒவ்வொருவரும் தத்தம் இனத்தைத் தழுவுத லவசி யம். இனம், உறவு, கிளை, சுற்றம் என்பன ஒருபொருட் சொற்கள். இவ்

வுறவினர் பூர்வம் ஒரே குடும்பஸ்தராயிருந்து, பிற்காலத்து வாழையடி
வாழையாகப் பெருகி, பல குடும்பங்களாகி, ஜீவனார்த்தம் வெவ்வேறிடங்
களிற்பரவிக் கொள்ளல்கொடுத்த லாதிய சம்பந்தமுடையோர். 'கொள்ள
லிற் கொடுத்தலிற் கூடியோர் சுற்றம், (அகத்தியம்). ஒவ்வொரு குடும்பத்தி
லும் நடைபெறும் சுபாசுப காலங்களில் வந்திருந்து பெருமைப்படுத்து
வோர் இவ்வுற்றாரே. 'சுற்றத்திற்கழகு சூழவிருத்தல்' 'சுற்றமற்றவர் சுக
மற்றவர்' 'பணமாவது வேண்டும் பத்து ஜனமாவது வேண்டும்' 'இனம்
இனத்தைக்காக்கும் வேலி பயிரைக்காக்கும்' என்பன பழமொழிகள். ஒரு
மரத்திலுள்ள கிளைகளையெல்லாம் தறித்துவிட்டுப் பாருங்கள் அதனழகை.
கிளைகளோடிருந்தால் மரத்திற்கழகுண்டாவதுபோல அநேக, உறவினரைப்
பெற்றிருத்தல் ஒவ்வொருவர்க்கும் சீரும் சிறப்பும் தருவதாகும். செல்வ
ரும், கல்வியாளரும் தங்களுக் குறவாயிருப்பதைக் கௌரவமாய்க் கருதா
தார்ஒருவருமில்லை. இதுபற்றியே அவர்கட்குக் கிளையென்பது உவமை யாகு
பெயராய்க் காரணப் பெயராயிற்று. இவர்களுள் சிலர் செல்வராயும் சிலர்
வறியராயு மிருக்கலாம். இதிற் செல்வர் வறியோர்க்குத் தம்மாலியன்ற
வுதவி செய்தல் வேண்டு மென்பதே இவ்வியாசத்தின் முக்கிய கருத்து.
அவ்வாறியற்றும் செல்வரே செல்வத்தாலாய பயனை யெய்துபவராவர்.
'தன்னைப் பெற்ற ஆத்தாள் கிண்ணிப்பிச்சை யெடுக்கிறாள், தம்பி கோதா
னம் பண்ணுகிறா,' னென்பதுபோல தம் சுற்றத்தார் தரித்திரத்தால் தவித்
துக் கொண்டிருக்க, தருமசத்திரங் கட்டுவதால் யாது பயன்? 'செல்வர்க்
கழகு செழுங்கிளை தாங்குதல்' அப்படிச்செய்யாதவர்கள் மனிதப் பதர்க
ளென்று சொல்லப்படுவார்கள்.

"மிக்கவெஞ் சமரிடை வெருவி யோடுநர்
* ஒக்கல்தன் புறத்தனி யிருந்து வாழ்குநர்
புக்குவேட் டகத்தினி லுண்ணும் புன்மையோர்
மக்களுட் பதடியென் றுரைக்கும் வையமே." (நைடதம்)

இத்தகையோர்கள் பொருள் பெற்றவர்களாயினும் இழந்தவர்களாகவே
எண்ணப் படுவார்கள்.

"உண்ணான் ஒளிநிறான் ஓங்கு புகழ்செய்யான்
துன்னருங் ‡ கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அ ஆ
இழந்தானென் றெண்ணப் படும்." (நாலடியார்)

யாதா மொரு தின்பண்டத்தைக்கண்ட எறும்பானது, மற்ற எறும்பு
களைத் தேடி யழைத்து வந்து அவற்றோடு கூடிப் புசிப்பதைக் காணலாம்.
காகம் தனிமையில் தின்பதைப் பார்க்கிறோமா? இல்லையே.

" காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே யுள."
" காகமுறவு கலந்துண்ணக் கண்டீர்."
" காலை யெழுந்திருத்தல், காணாமல் பெணர்தல்,
மாலை குளித்து மனைபுகுதல்,—சால
உற்றாரோ டுண்ணல், உறவாட லிவ்வாறும்
கற்றாயோ காக்கைக் குணம்."

எனப் பெரியார் பேசியிருத்தலைக் காண்க.

---

* ஒக்கல்=சுற்றத்தார். ‡ கேளிர்=சுற்றத்தார்.

இஃதன்றோ சுற்றத்திற்கழகு. உண்மையிங்ஙனமாக, செல்வரிற் பெரும்பாலோர் ஏழையுறவின னொருவன் தம் வீட்டிற்கு வந்தால் ஏனென்றுங் கேட்பதில்லை; ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. தாங்கள் சாப்பிடுவதொருவகை அவனுக்குப் படைப்பதொருவகை. அவனோடு பேசுவதும் அகௌரவம். இரண்டொருநாள் தங்கிவிட்டானோ? 'இதென்ன சனியன்; முறம் சோறு படிகுழம்பு' என்பார்கள். சிறு பிள்ளைகளுக்கும் அவமதிப்பு. சற்று பணமுள்ளவன் வந்தால் உபசாரத்திற் களவேயில்லை. காலணாகத்திரிக்காயில் காலம்போக்கும் கனவான் வீட்டில் கனத்த செலவு. சாப்பாட்டு விஷயமே இப்படியானால், மற்றதைச் சொல்லவேண்டியதேயில்லை. அவ்வளவோடாவது நிற்கிறதா? பொறாமை வேறே. வாழ்ந்தாலும் பார்க்கமாட்டார்கள், கெட்டாலுந் தாங்கமாட்டார்கள். தங்கள் பூர்வ நிலையினை நினைப்பதேயில்லை போலும். இன்னும், ஒரே குடும்பத்திற் பிறந்தவர்கள், சிற்றப்பன் பெரியப்பன் பிள்ளைகள், சகோதரர், எவ்வாறு நடந்து கொள்ளுகிறார்கள்! 'பங்காளிகள் பட்டபாடு பாரதமன்றோ?' 'பங்காளியையும் பனங்காயையும் பதம் பார்த்து வெட்டவேண்டும்' என்பதே அவர்களது சாஸ்திரத்தின் முதல் நீதி. ஈதென்ன கோரம்!

வறியார்க் கீவதன்றோ தருமம். வறண்ட ஏரிக்கல்லோ மழை வேண்டும். கடலில் கலமழை பெய்வதால் காரிய மென்ன? செல்வம் நிலையற்றது. சகடக்கால் போன்றது. இன்று போகும்; நாளை வரும். ஓடம் வண்டியிலேறும்; வண்டி ஓடத்திலேறும். பணத்தைச் சம்பாதிக்கலாம்; ஜனத்தை சம்பாதிக்க முடியாது. சம்பாதிக்கக்கூடிய நிலையற்ற செல்வத்தைக் கொண்டு, பெறக்கூடாத பந்து ஜனங்களுக்குதவி செய்து, நிலையுற்ற கீர்த்தியை யடைதல் வேண்டும். 'அப்படிச் சொன்னான், இப்படிச் செய்தான்,' என வெறுக்கலாகாது. 'குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை.' குற்றம் மனிதப் பிறவிக்கியற்கை. குற்றஞ் செய்தோர்க்கும் நன்மை செய்ய வேண்டு மென்பதே வேத நீதி.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்" (குறள்)

ஒவ்வோரினத்திலும் எத்தனையோ ஏழைச் சிறுவர் கல்வி கற்கச் சக்தியற் றிருக்கின்றனர். பிழைக்க வழியற்றுத் தவிப்போர் அநந்தம். இன்னோரன்னோர்க் குதவிபுரியாத செல்வப் பந்துக்களாலாகிய பயனென்? "ஏய வாழ்வுற்றாருடன் போய்" என்னும் வாக்கியத்தின் கருத்தியாது? ஆகையால், 'ஙப்போல் வளை,' என்ற நீதியைக் கடைப் பிடித்தொழுகலே கடமையாம்.

ஒவ்வோரினத்திலும் இவ்விதமே நடைபெறுமாயின், ஏழைகள் பெருகி அன்னியரிடம் பல்லைக் காட்டிப் பறக்க விழிக்கக் காரணமில்லாமல், நம்தேசம் எவ்வளவோ உயர்நிலையி லிருக்குமே! ஆயின், அன்னியருக் குதவலாகாதோ வென்றும் ஆசங்கை யுண்டாகலாகாது. எவர்க்கும்,எவற்றிற்கும் பிரயோஜன முடையோரா யிருத்தலே பிறவிப்பயன். ஆனாலும் தம் இனத்தாரிடம் அன்பிலார்க்கு அன்னியரிட ம் அன்பு எவ்வாறுண்டாம்? 'யாவரும் சகோதரரே' யெனக்கருதும் விசால மதியை எல்லாரிடத்துமே எதிர்பார்ப்பது கூடாமை. ஆனது பற்றியே நம் பெரியோர் இவ்வித இடற்கைப் பிரிவுகளை யுண்டாக்கினர். அவர்கள் அறிவில்லாமல் யாதொன்றும் செய்து விடவில்லை. ஆகையால்,

'ஙப்போல் வளை.'

"அன்பிலா ரெல்லாந் தமக்குடையர் அன்புடையார்
என்பு முடையர் பிறர்க்கு." (குறள்)

பூ. ஸ்ரீநிவாசன், தமிழ்ப் பண்டிதர்,
ராணிப்பேட்டை.

போதனா முறை.

லேட்சுவோர்த்து பள்ளிக்கூடத்தில் போதனா முறை.

இங்கிலாந்தில் லெட்சுவொர்த்து என்று ஒரு நகரம் இருக்கின்றது. அது மற்றை நகரங்களைப்போலில்லாமல் தோட்டங்களுக்குள் அமைக்கப்பட்ட வீடுகளால் நிரம்பியுள்ளது. அங்கே பிரஹ்மஞான சபையாரால் நடத்தப்பட்ட ஒரு பள்ளிக்கூட மிருக்கின்றது. அப்பள்ளிக்கூடத்தில் அனுசரிக்கப்பட்ட போதனா முறையானது மேற்கண்ட சபையாரால் போதிக்கப்பட்ட உண்மைகளைத் தழுவி அனுசரிப்பது. அப்பள்ளிக்கூடத் தலைவர் டாக்டர் ஆர்ம்ஸ்டிராங்ஸ்மீத் என்பவர். அப்பள்ளிக்கூடத்தில் அனுசரிக்கும் புதிய முறைகளைப்பற்றி விசாரிப்பதற்காக ஒருவர் அத்தலைமை உபாத்தியாரைக்கண்டு பேசப்போயிருந்தார். அவர்களுக்குள் நிகழ்ந்த சம்பாஷணையானது இந்தியாவில் உள்ள உபாத்திமாருக்கும் தகப்பன்மாருக்கும் உபயோகமுள்ளதாக இருக்கும் என்று நாம் எண்ணுவதால் அதை இங்கு எடுத்துக் கூறுகிறோம்:

தலைமை உபாத்தியார் :—"இந்தப்பள்ளிசகூடத்தில் நாங்கள் கற்பிக்கும் விஷயங்கள் எல்லாவற்றிலும் கவனித்து வரும் விதிகளில் ஒன்று என்னவென்றால், குழந்தைகள் மனது எந்த வழிகளில் செல்லுகின்றது, எந்த விஷயங்களை அறியக் குழைந்தைகள் ஆவலுடன் பிரியப்படுகிறார்கள் என்பதை நாங்கள் கவனிப்போம். அவர்கள் மனது ஒரு விஷயத்தில் செல்லுகிறதில்லை என்றால் அந்த வழியில் செல்லும்படி நாங்கள் கட்டாயப்படுத்துகிறதேயில்லை. ஒரு பாடம் ஒரு குழந்தைக்குப் பிடிக்கிறதேயில்லை யென்றும் அதை முழுவதும் வெறுக்கிறதென்றும் தெரிந்தால் அந்தப் பாடத்தையே அந்தக் குழந்தையின் படிக்க வேண்டிய பாட அட்டவணையிலிருந்து எடுத்துவிடுவோம். எல்லாப்பாடங்களையும் அப்படி எடுக்க முடியுமா.? சில பாடங்களைக் குழந்தைகள் கற்கவேண்டியது அத்தியாவசியமாயிருக்கும். ஆகையால் இன்றியமையாத பாடங்கள் விஷயத்தில் தவிர மற்ற பாடங்கள் விஷயத்தில் நாங்கள் மேற்கூறியபடி செய்வோம். பிரஹ்மஞானப் புத்தகங்களிலிருந்து படித்திருப்பதால், ஒவ்வொரு குழந்தையும் பூர்வஜன்ம வாசனையினாலும், அனுபவத்தினாலும் சிற்சில விஷயங்களில் அது தேர்ச்சி பெற்றிருக்கின்றதென்றும், சிற்சில விஷயங்களில் மனம் செல்லாது என்பதையும் நாங்கள் அறிந்திருக்கிறோம். ஒவ்வொருகுழந்தையும் அதற்கு எற்ற வழியில் முன்னுக்கு வரவேண்டுமென்று முயலுகிறோம். அதை ஹிம்சைசெய்து அது செல்ல இஷ்டப்படா வழியில் செல்லும்படி செய்ய எங்களுக்கு இஷ்ட மில்லை."

மற்றவர்:—உங்கள் பள்ளிக் கூடத்தில் எந்த எந்தக் காலத்தில் பரீக்ஷைகள் நடக்கும்?

த-உபாத்தி:—மற்ற பள்ளிக் கூடங்களில் நடக்கிற மாதிரி, ஒவ்வொரு விடுமுறை நாளுக்கும் முந்தி பரீக்ஷைகள் வைப்பதில்லை. குழந்தைகள் எப்போது தங்கள் ஞானத்தைப் பரிசோதிக்கும்படி கேட்கிறார்களோ, அப்போதுதான் நாங்கள் பரீக்ஷைசெய்கிறது வழக்கம். மேலும் பரீக்ஷையில் ஒரு பையனுக்கு எவ்வளவு "மார்க்குகள்" கிடைத்திருக்கின்றன என்பதையும், அந்தக்குழந்தை தேறிவிட்டானா என்பதையும் பகிரங்கப்படுத்துவது கிடையாது. அந்தவிஷயங்கள் அந்தந்தக் குழந்தைக்கும் உபாத்தியாயருக்கும் மட்டும் தெரியுமேயொழிய வேறு ஒருவருக்கும்தெரியாது. போட்டித்தனத்தை இவ்விதமாய் ஒழித்துவிடுகிறோம். ஒருவனை முந்தவேண்டும் என்ற எண்ணமும் அதனால் எற்படும்பொறாமையும் இதனால் ஒழிகிறது. ஆனால் ஒவ்வொரு பையனும் உபாத்தியாயரிடம் சென்று என்னைப்பரீக்ஷிக்க வேண்டும் என்று சொல்லப் பிரியப்படுகிறான் ஆதலால், ஒவ்வொருவனும் ஆத்திரமாயும் சுறுசுறுப்பாயும் இருக்க முயலுகிறான்.

மற்றவர்:—ஆனால் உங்கள்பள்ளிக்கூடத்தில் பரிசு அளித்தல்கிடையாதோ?

த-உபாத்தி:—கிடையாது. ஒரு பாடத்தில் நன்றாய்த் தேர்ச்சியடைந்திருத்தற்குவெகுமதி என்னவென்றால், தன்னைவிடக்குறைந்ததேர்ச்சியுள்ளவனுக்கு உதவி செய்யும்படி உபாத்தியாயரால் அனுமதி கொடுக்கப்படுவது தான்.

மற்றவர்:—குழந்தைகள் பெரியவர்களான பிறகு மற்ற பள்ளிக்கூடப் பிள்ளைகளைப்போல் பெரிய பொதுப் பரீக்ஷைகளுக்குப் போகும்படிசெய்யலாம் என்று உத்தேசம் உண்டோ இல்லையோ?

த-உபாத்தி:—ஆம். அவசியம் பொதுப் பரீக்ஷைகளுக்குப் போக வேண்டும். சில காலத்திற்குப் பிறகு எங்கள் மாணாக்கர்கள் பொதுப் பரீக்ஷைகளுக்குப்போய்த் தேறவேண்டுமென்றும் அதற்காகப்பலபுஸ்தகங்களை மனப்பாடம் பண்ணவேண்டும் என்பதும் எங்களுக்குத்தெரியும். மற்றவர்களைப்போலவே பரீக்ஷைகளுக்குப் போகவேண்டுமென்பதும், வியாபாரம் முதலியன செய்ய வேண்டும் என்பதுமே எங்கள் எண்ணம். ஒவ்வொரு மாணாக்கனும் சம்பாத்தியம் செய்யத் தகுதியுள்ளவனாக வேண்டும் என்பது எங்கள் கருத்து. சம்பாத்தியம் செய்ய வேண்டுமானால் பரீக்ஷைகளில் தேற வேண்டும். பரீக்ஷைகளில் தேறவேண்டுமானால் மனப்பாடம் பண்ணாமல் முடியாது. உண்மைதான். ஆனால் அவசியமாகிறவரை நாங்கள் நெட்டைப் பாடம் பண்ணும் வழக்கத்தைத் தள்ளிவைக்கிறோம். அதுவரை குழந்தைகள் மனதை, ஏகாக்கிரப் படுத்துவதிலும் ஞாபக சக்தியை அதிகப்படுத்துவதிலும் நாங்கள் முயற்சி செய்கிறோம்.

மற்றவர்:—அது எப்படி?

த-உபாத்தி:—ஒரு தட்டில் பல பொருள்களை வைத்து ஒவ்வொரு குழந்தையினிடத்தும் ஒருதடவை காட்டுகிறது. அதைப்பார்த்த ஞாபகத்தைக் கொண்டு அந்தக்குழந்தைகள் தட்டில் உள்ள ஒவ்வொரு பொருளின்பெயர், உருவம், நீளம், கனம், வர்ணம், எந்த வரிசையில் இருந்ததென்பது, இவை போன்றமற்ற விவரங்களையும் சொல்லவேண்டும். இவ்வாறு தினந்தோறும் பழகினால் வெகு சீக்கிரம், அக்குறிப்பான ஞாபக சக்தியோடு குழந்தைகள் எல்லா விஷயங்களையும் சொல்லப்பழகிவிடுகின்றன. இன்று காலையில்கூட ஒரு தட்டில் 8-சாமான்களை வைத்துக் குழந்தைகளுக்கு ஒரு முறைகாட்டி அவைகளைப்பற்றி விவரங்களைக் கேட்டோம்.

இதே மாதிரி எதையும் பழக்குகிறோம். ஒரு செய்யுளில் ஒரு வரியை ஒரு முறை மெல்ல வாசித்துக் காட்டி அதை யார் திருப்பிச் சொல்ல முடியும் என்று பார்க்கிறது. அதில் தேர்ந்த பிறகு இரண்டு மூன்று வரிகளைத் திருப்பிச் சொல்லமுடியுமா என்று பார்க்கிறது. இப்படியே தினம்தோறும் பழக்குகிறோம். முக்கியக் கருத்து என்ன வென்றால், ஞாபக சக்தியை விருத்தி செய்தால் பின்னால் ஞாபகம் செய்வது சுலபமாய்விடும்.

இன்னும் விஷயம் என்ன வென்றால், பொதுப் பரீக்ஷைக்குப் போகும் படி அவ்வளவு பெரியவனாகும் வரை, குழைந்தைகளுக்கு வீட்டுப்பாடமே கிடையாது. பள்ளிக்கூடத்தில்தான் பாடம் நடத்துகிறது. அதைத் தவிர மற்ற நேரங்களில் பாடம் படிக்கக் கூடாது.

மற்றவர்:—வீட்டுக் கணக்கு பாடம் முதலியன கொடுத்தால் குழந்தைகள் களைப்படைவார்களென்றா?

த-உபாத்தி:—ஆம். குழந்தை பள்ளிக்கூடத்தி லிருந்து வீட்டுக்குப் போகும்போது மறுநாள் பள்ளிக்கூடம் வரை மனதிற்கு வேலையே கொடுக்கக் கூடாதென்பது எங்களுடைய தீர்மானம். குழந்தைகளுக்குத் தலைவலி, கண்வலி முதலியவைகளுக் கெல்லாம் காரணம், வீட்டுப்பாடம், குட்டைப் பார்வை, நீண்டபார்வை, முதலியவைகளே. வியாதி வராதுபோனாலும், பிள்ளைகளின் புத்தி மயங்கிக் கலங்கி விடுகிறது. அவர்கள் சுறுசுறுப்பும், கலகலப்புமாய் இருக்கவேண்டியிருக்க, அவ்வாறில்லாமல் செய்கிறது. களைத்துப்போன குழந்தைக்கு என்ன சொல்லிக் கொடுக்கமுடியும். பள்ளிக்கூடத்தில் பாடம் நடக்கிறபோதே ஒரு குழந்தை களைப்படைந்தால் போய் உட்கார்ந்திருக்க ஒரு சாய்மானம் கட்டிவைக்கலாம் என்றுகூட உத்தேசிக்கிறோம்.

மற்றவர்:—உங்கள் அடக்குமுறையின் விசேஷம் என்ன?

த-உபாத்தி:—"விசேஷம் என்னவென்றால் அடக்கு முறையே யில்லாதிருப்பதுதான். அதாவது குழந்தைகள் தங்களைத்தாமே அடக்கிக் கொள்ளுகிறார்கள். எப்படி என்றால், உபாத்தியாயர்கட்டளையிடுகிறதில்லை. "இந்த மாதிரி செய்வதற்கு இன்னகாரணம் ஆகையால் இந்தமாதிரி செய்யவேண்டும்" என்று காரணத்தை உபாத்தியாயர் காட்டுகிறார். குழந்தைகள் அதை அறிந்த உடன் தாமே அடங்கி நடக்கின்றன. அனேகமாய்ப்பள்ளிக்கூடங்களில் "இதைச் செய், அதைச் செய்யாதே" என்று உத்தரவு இடப்படுகிறது. குழந்தைகள் வெளித்தோற்றத்திற்கு அடங்கி யிருந்தாலும் அவர்களுக்குக் காரணம் தெரியாததினால் அவர்களுடைய மனதோடு கூடிய அடக்கம் ஏற்படுகிறதில்லை" என்றார்.

இப்படி பேசிக்கொண் டிருந்தசமயத்தில் அறைக்கு வெளியில் குழந்தைகளுடைய குதூகலமான இரைச்சல் கேட்டது. தலைமை உபாத்தியாயர் "எங்கள் அடக்கு முறையைக் காட்டுகிறேன்" என்று சொல்லி உடனே வெளியே சென்று இரண்டு நிமிடங்களில் திரும்பி வந்தார். பிள்ளைகள் இருந்த அறை நிச்சத்தமாய் விட்டது.

மற்றவர்:—"எப்படி அவர்கள் அடங்கினார்கள்?" என்று கேட்டார்.

த-உபாத்தி:—"நாங்கள் உள்ளேபேசிக்கொண்டிருக்கவேண்டாம் என்பது உங்கள் எண்ணமா" என்று அமைதியாய்க் கேட்டேன். அவ்விதம் நாங்கள் எண்ணவேயில்லை என்றார்கள். உடனே நிச்சத்தம் ஆய்விட்டது. இனி

சத்தமே போடமாட்டார்கள் "நான் சத்தம்போடாதே" என்று கட்டளையிட்டாலும் இதேமாதிரி நிச்சத்தம் ஏற்படலாம். இருந்தாலும் குழந்தைகளுடைய சந்தோஷகரமான ஒற்றுமையோடுகூடிய சம்மதமாகாது. இதுதான் குழந்தைகளையே அடங்கி யிருக்கச் செய்கிறேன் என்றதின் கருத்து.

மற்றவர்:—ஆனால் பள்ளிக்கூடத்தில் விதிகளே கிடையாதா?

த-உபாத்தி:—உண்டு. இரண்டே விதிகள். மாணுக்கர்களுக் கொன்று; உபாத்தியாயருக் கொன்று. மாணுக்கர்களுக்கு விதி என்ன வென்றால், ஒருவரைப்பற்றிப்பேசத்தொடங்குமுன், நீசொல்லப்போவது உண்மையா, அன்புடன்கூடியதா என்று யோசித்துப் பார்த்து அப்பால் பேசு என்பது. இவ்விதிபள்ளிக்கூடத்திலும் அதற்கு வெளியிலும் அனுசரிக்கப்பட வேண்டும். உபாத்திமாருக்கு ஏற்பட்டவிதி யென்ன வெனில், மாணுக்கர்கள் ஒரு விஷயத்தைப்பற்றித் தெரியவேண்டுமென்று கேள்விகேட்டால், நேராக விடை பகராதே. அவர்களையே அவ்விடையைத் தெரிந்து கொள்ளும்படி செய் அல்லது அவ்விடையைத் தெரிந்துகொள்ள எந்தப் புஸ்தகத்தைப் பார்க்க வேண்டும் அல்லது வேறென்ன முயற்சி செய்யவேண்டும் என்று காட்டு என்பதுதான். இந்த விதியை நான் சிகாகோ பள்ளிக்கூடத்தில் கற்றுக் கொண்டேன்.

ஆர். இரங்கசுவாமி ஐயர்.

குறிப்பு:— இந்த விஷயத்தை யனுப்பிய நண்பர்க்கு நாம் மிக்க வந்தன மளிக்கிறோம். ஆழ்ந்து யோசிக்கும் அறிவாளிகளுக்கு மேற்கண்ட போதனு முறையிலுள்ள மிக்க அருமையான விசேடங்கள் நன்கு புலப்படும். அவற்றில் அடங்கியுள்ள விவரமும் அவற்றைப் பலவழிகளில் உபயோகிக்கும் முறைமையும், வழியும் புலப்படும். ஒவ்வொரு உபாத்தியாயரும் இதைப் பன்முறை வாசித்துணர்ந்து கையாடுவது அவசியமென்பதே நமது கருத்து.

பத்திரிகாசிரியர்.

—∘∘⁂∘∘—

ஸ்திரீகள் பக்கம்

காரைக்கால் அம்மையார் சரித்திரம்

புண்ணிய பூமியாகிய நமது நாட்டின் தென்பாகத்தில் கிழக்குக் கடற்கரையிலுள்ள காரைக்கால் என்னும் ஊரிலே பூர்வத்தில் வைசியகுலத்தில் உதித்த தனதத்த செட்டியாருக்கு தவப்பயனினுல் புனிதவதியார் என்னும் பெண் குழந்தைபிறந்து நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து சதா பரமசிவத்தினிடம் அநன்யமான பக்தியைச்செலுத்தி வந்தது. தந்தை அப்பெண்மணியாருக்குப் பருவத்தில்கலியாணஞ்செய்யக்கருதி நாகபட்டினத்திலே வைசியகுலதிலகமான பரமதத்த செட்டியாருக்கு அவரை விவாகஞ் செய்துகொடுத்து. சதிபதிகள் இல்லறம் நடத்திவரும்நாளில், பரமதத்தசெட்டியாரிடம் வந்த அவரது நண்பர் ஒருவர் மாங்கனி இரண்டு பரமதத்த செட்டியாருக்கு அளித்தனர். அதைச் செட்டியார் இல்லாளிடம் அனுப்பினுர். புனிதவதியார் சதா ஈசுவரபக்தியில் ஈடுபட்டவராதலால், வழக்கம் போல் அவரது இல்லத்திற்கு அன்று ஓர் அடியார் பசிப்பிணியால் மிக்க வாட்டப்பட்டவராய் பிக்ஷைக்குவரவும், அச்சமயம் வீட்டில் அன்னமாத்திரமிருந்தமையால், அம்மையார் பாலும் தமதுகணவர் அனுப்பியுள்ள மாங்கனிகளில் ஒன்றையும் படைத்து, அன்னமளித்தனர். அடியார் புசித்து திருப்தி

யடைந்து மறைந்தார். உடனே செட்டியார் வீட்டிற்குவந்து போஜனம் செய்
கையில் நம்மால் வீட்டுக்கு அனுப்பப்பட்டுள்ள மாங்கனிகளி லொன்றைக்
கொணர்கவென்று கேட்க புனிதவதியார் எஞ்சியிருந்த கனியைக் கொண்டு
வந்து கொடுக்கவும், அக்கனி இனிப்பாக விருக்கக்கண்டு வியப்புற்று "இத்
தகைய உருசியுள்ள கனியை நான் கண்டதேயில்லை. மற்றொரு கனியையும்
கொண்டுவா" வெனவும், புனிதவதியார் மற்றொரு கனியைக் கொண்டுவரச்
சென்றவர்போல் சென்று மறைவிடத்தில் நின்று, அந்தோ அக்கனியை
அடியாருக்கு அளித்து விட்டோமே யென்றும், கடவுளே இப்படிச் சோதிக்
கலாமா வென்றும் கடவுளிடத்து பக்தியைச் செலுத்தி வேண்டலும், சிவ
பெருமான் அவ்வம்மையாரது வேண்டுகோளுக்கிணங்கி, ஓர் மாங்கனியைப்
புனிதவதியார் கையில் சேரும்படி அருளினார். அம்மையார் உடனே அதைக்
கொண்டுபோய்ப் பரமதத்தருக்குக் கொடுக்கவும் அதையும் பரமதத்தர்
புசிக்க, முந்திய பழத்தைவிட அப்பழம் அதிருசியாகவிருக்கக்கண்டு, இப்ப
ழம் ஏதெனப் புனிதவதியாரைக் கேட்டலும், பதிவிரதையான புனிதவதி
யார்ஒன்றும் சொல்லமுடியாமல் நடந்தவற்றை ஒளியாமல் தம் புருஷனி
டம் சொன்னபோது, அது வாஸ்தவமாயின் அதே மாதிரி யின்னும் ஓர்
பழம் தருவி யெனக் கோரலும் அதற்கு இசைந்த பதிவிருதா சிரோன்மணி,
பக்தசிகாமணி, இமைப் பொழுதில் கருணையங்கடலாகிய சிவபிரானைத்
தோத்தரிக்கவும், திரும்பவும் ஓர் கனி அம்மையார் கரத்தே யமையப்
பெற்றனர். அதை அம்மையார் புருஷனிடங் கொடுத்தபோது அக்கனி
திடீரெனமறைந்தது. இதனைக் கண்டு ஆச்சரிய முற்ற செட்டியார் இவ்வுத்
தமி தெய்வாம்சம் பொருந்தியவளே, இவருடன் நாம் இல்லறம் நடத்து
வது கூடாது என்று எண்ணித் தாம் திடீரென அவ்வூரைவிட்டுக் கப்பல்
மார்க்கமாக வெளியூர்களுக்குச் சென்று அங்கு அதிமாகப் பொருள் சம்
பாதித்து மிக்க தனவந்தராகி, மதுராபுரிக்கு வந்து அங்குத் தம் இனத்தில்
வேறொரு விவாஹம் செய்து கொண்டார். அவருக்கு ஓர் பெண்குழந்தை
யும் பிறந்தது. அக்குழந்தைக்குத் தமது மூத்த பத்தினியாகிய புனித
வதியார் திருநாமத்தைச் சூட்டி யிருந்தனர். இப்படிக்கு பரமதத்த
செட்டியார் நல்ல ஸ்திதியில் மதுராபுரியில் இருந்து வருவதைக் கேள்விப்
பட்ட தனதத்தசெட்டியார் தமது குமாரியைச் சிவிகையில் எற்றிக்
கொண்டு மதுராபுரியில் தமது மாப்பிள்ளையிடம் கொண்டுபோய் விட்டு
விடும்படியாக ஆக்ஞாபித்தார். அவ்விதமே கொண்டு போய் விடவும் பரம
தத்த செட்டியார் தமது இளைய பத்தினியுடன் வந்து அம்மையாரைக்
கண்டு சுற்றி வந்து நமஸ்கரிக்கவும், அம்மையார் "பர்த்தாவின் எண்ண
மிதுவாயின் இனி யிவ்வழகிய தசைப்பொதி யார்கண்களுக்குக் களிப்பை
யுண்டாக்குதற்காகச் சுமக்கப்பட வேண்டும்" என்று கருதி உடனே
கடவுளைத்தியானித்துத்தமது அங்கத்திலுள்ள தசைப்பாகத்தை உதிர்த்துப்
பூதவுடலையடைந்து திருக்கைலாயத்திற்குக் கரங்களாலும் சிரத்தாலும் நகர்
ந்து சென்றார். கைலயங் கிரியில் சிவபெருமான் உமாதேவியாருடன் வீற்றி
ருக்கையில் உமாதேவியார் பேயுருவுடன் வரும் புனிதவதியாரைக் கண்டு
வியப்போடு, இவர் யாரெனப் பரமசிவனை வினவலும், உடனே பரமசிவன்
அம்மைவருகிறார் எனச்சொல்லியவுடனே, அம்மையார் நகர்ந்து நகர்ந்து சிவ
பெருமான் சமீபம் வரவும், அம்மையே வருக எனச் சொல்லலும் அப்பா
வந்தேனென அம்மையார்கூறலும், உடனே அம்மையார் பரமசிவனைநோக்கி
"நான் என்றும் உமது திருவடியிலேயே இருக்கவேண்டும்" எனப்பிரார்த்
தித்தார். பரமசிவம் அவ்விதமே நாம் உனக்குத் திருவாலங்காட்டில் வந்து

தரிசனம் கொடுப்போமெனவருளினர். அம்மையார் விடைபெற்றுத் திருவாலங்காட்டுக்குச் சென்று அங்கு சிவபெருமானின் ஆனந்தத்தாண்டவத்தைப் பார்த்துக்களிகூர்ந்து அற்புத பாகங்களால் பரமனைத்துதித்து, சிவபெருமானுடைய திருவடியில் மறைந்தனர். இஃது நமது மாது சிரோன்மணிகளுக்காகப் பெரிய புராணத்தி லிருந்து சுருக்கமாக எழுதப்பட்டது.

K. சீனிவாசகம் பிள்ளை.

28-5-19. தென்திருப்பேரை.

குறிப்பு :—இச்சரிதையில் கற்பின் தன்மையை விளக்கும் ஒரு அரிய விஷயம் சகோதரிகளால் கவனிக்கத்தக்கது. எதுவெனில் :—கணவன் இரண்டாவது கனியைப்புசித்தபின் அதன் இனிமைக்கு வியப்புற்று இது எது என்று வினவியபோது அம்மையார் இருதலைக் கொள்ளியில் சிக்கிய எறும்பு போல் மிக்க இக்கட்டான மனோவேதனையடைந்தனர். ஏனெனில், இப்போது பரமசிவத்தின் இரகசியத்தையாவது வெளியிடவேண்டும். அல்லது அதை மறைக்கப் பார்த்தாவுக்குப் பொய் கூறலாவது வேண்டும். இத் தருணத்தில் கடவுள் இரகசியத்தை வெளியிடும் அபசாரத்தைச் செய்தாலும் செய்யலாமேயன்றிக்கணவனுக்குப்பொய் கூறலாகாதெனத் துணிந்து உண்மையை யியம்பிவிட்டது கவனிக்கத் தக்கது.

பத்திரிகாசிரியர்.

"பால்ய விதவைகளின் பரிதாப நிலை"

உலகிற் றோன்றும் ஒவ்வொரு ஜீவனும் துக்கத்தில் வெறுப்பும் சுகத்தில் விருப்பும் உடையதே.

நாகரீகம், நாகரீகம், என்று கூறிக் கொண்டு திரிகிற மனிதவகுப்பைச் சேர்ந்த சிலர்சுகமடைவதற்கு (ஒன்றுக்கு நூறு, ஆயிரம் மடங்கு) அதிகமான வழிகளை விர்த்திபண்ணிக்கொண்டு சீரழிகின்றனர். மற்ற ஜீவன்களுக்கில்லாத விசேஷசுகத்தையடைதற்குப் பேராசை பிடித்த மனிதக் கூட்டத்தார் செய்யும் தந்திரங்களும் கொடுமைகளும் எண்ணிறந்தன.

சுகத்தினளவுக்குத் தக்கவாறு துக்கமும் பெருகி எப்பொழுதும் ஒன்றையொன்றுபற்றி யிழுத்துக்கொண்டுதான் வரும். ஒருகாலத்தில் ஜெர்மன் சக்கிரவர்த்தியார் செல்வமும், செல்வாக்கும், மிகுந்திருந்தமையால் தலைகால் தெரியாத இறுமாந்த நடையுடையவராக விருந்தார். இப்பொழுது தாய்ப்பூமியின்கண் ஓர் குடிமகனாகவும் வசிக்க முடியாத துர்ப்பாக்கியனானார்.—இந்நில வுலகின் திலகமென விளங்கிய நம் பாரததேவி சில நூற்றாண்டுகளுக்கு முன் தன்னை யெதிர் பார்த்திருந்த சகோதரி (நாடு) களுக்குப் பொன்னையும் பொருளையும் நற்போதனைகளையும் அள்ளியிறைத்து ஆனந்தத்துடனிருந்தாள். இப் பொழுது பொன்னும் பொருளும் (கைத்தொழிற்கல்வி) போதனையும் தனக்குக் கொடுப்பாரின்றிப் பரிதபிக்கிறாள்.

துக்கத்தை யடைந்த மனம் சுகத்தைத் தேடுகிறது. சுகமோ, தான் வரும்பொழுது பின்னோடு துக்கத்தைக் கூட்டிவந்து விட்டு விட்டுச் செல்கிறது. இதுதான் இவ்வுலகினியற்கை.

சிலநூற்றாண்டுகளுக்கு முன் நம்தேசம் மொகலாய வரசர்கள் வசப் பட்டிருந்த பொழுது, கல்யாணமாகாத வாலிபப் பெண்களுக்கு நேர்ந்

திருந்த இக்கட்டால் நம்மவர்கள் புத்தியறியு முன்னரே மணமுடித்துவிட வேண்டுமெனச் சட்டமுண்டாக்கிக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. அந்நியனுக்குப் பெண் கொடுக்கும் துக்கத்தையொழித்துச் சுகமடைய வழி தேடினார்கள். இப்பொழுது அது நம்மைப் பெருந்துயரத்திலமிழ்த்திவருகிறது.

(வேறு சில நற்காரணங்களுக்காகப் பால்யவிவாகம் சட்டமாக்கப்பட்டிருப்பினும், அது தற்காலம் செய்து வரும் கொடுமையை நினைக்கின் எவ்வழியிலும் பொருத்த முடையதென்று ஜீவதயையுள்ள எவரும் ஒப்பார்)

இப்பொழுது நமது தேசத்தில் பதினைந்து வயதிற்குட்பட்ட மூன்று லெட்சத்தி ஐம்பதினாயிரம் பெயர் விதவைகளென்றும், அவர்களில் ஐந்து வயதிற்குற்பட்ட பதினேழாயிரம் குழந்தைகளும், ஒரு வயதிற்குட்பட்ட (கல்யாணம் செய்த பதிமூவாயிரத் திருநூற்றுப் பன்னிரண்டு குழந்தைகளுள்) ஆயிரத்துப் பதினாலு குழவிகளும் வைதவ்யச் சடங்கை நிறைவேற்றிவிட்டனவாம். என்னே பரிதாபம்! நமது மாகாணத்தில் மட்டும் பத்து வயதிற்குட்பட்ட ஐம்பதினாயிரத்து நாற்பத்தாறு சிறுமிகள் விதவைகள் என்று சொல்லப்படுகிறது. சகோதர சகோதரிகளே! இதனைப் பார்க்கும் பொழுது நெஞ்சம் பதறவில்லையா! சுகதுக்க மின்னதென்றறியாப் பாலர்களைத் துக்கத்திலாழ்த்தும் மாதாபிதாக்களின் மடமையை நினைக்கின், அம்மம்மா மனம் நடுங்குகிறது. என்னே மடத்தனம்! இதற்கு ஊழ்வினையென்று சமாதானம் சொல்வது கொஞ்சமும் பொருத்தமுடையதன்று. வயது வந்த பிறகு விவாகம் செய்து விதவையாகி விட்டால் மேற்கூறிய சமாதானம் செய்து கொள்ளலாம். பால் மணமாறாச்சிறுமிகளுக்கு மாங்கல்யம் சூட்டுவதன் அவசியமென்ன? பெண் புருஷனில்லையென்றழுததா? அல்லது வயது வந்தபின் மணமகன் அகப்படானென்ற எண்ணமா? அப்படிக்கில்லாத பொழுது, தாய்தந்தை யுறவினர் விருப்பத்திற்காக மணமுடித்து விட்டுப் பெண்களைத் துயரக்கடலிலமிழ்த்துதல் தருமமா? அவர்கள் வேண்டாத பொழுது மாங்கல்யத்தைக்கட்டி, அறுத்துவிட்டு, உனக்கொன்றுமில்லை ஒருவேளையாகாரத்துடன் மூலையில் முக்காடிட்டுக்கிடவென ஆக்ஞாபிக்கும் சட்டம் எவ்வளவு கொடிது! (விசேஷசுகத்தை விரும்பும் மனிதவகுப்பிற்சேர்ன்றிய) ஓர் ஜீவனின் வாழ்க்கையை அடியோடு கெடுத்து விடுதல் நீதியா? இத்தகைய நீதியுள்ளவரை நம் நாடு முன்னுக்கு வரமுடியவே முடியாது. ரௌலெட் சட்டம் கொடுமையானதென இந்தியர் யாவராலும் ஒரேமுகமாகக் கண்டிக்கப்படுகிறது. ஆனால் பாலிகைகளை ஜென்மத்தீர்ப்பாகச் சிறையிலிலடைக்கும்படியான கொடுஞ்சட்டத்தைக் கவனித் தொழிப்பாரில்லையே. ஆனதால் இக்கொடிய முறையை அடியோடு நீக்குதற்குறிய வேற்பாட்டைத் தேடவேண்டுவது அவசியத்திலும் அவசரமாம்.

உலகம் சுகத்தையே விரும்புகிறது. (அது கருதியே) ஒவ்வொரு கட்டுப் பாடும் சட்டமும் காலத்திற்கேற்றவாறு உண்டாக்கப்படுவதாம். அந்தந்தக் காலத்தினர் நிலைமை நோக்கி ஒவ்வொருகட்டுப் பாட்டையும் திருத்தியோ, நீக்கியோ, அமைத்துக் கொள்ளவேண்டும். "காலமறிந்து பிழையாதான் கோலமழிந்து குரங்காவான்" என்றபடி மொகலாயவரசு நீங்கிய பின்னர் மத்திய காலத்தினரால் பால்ய விவாகச் சட்டம் உடனே நீக்கப்படாமையால்வந்த பழியை நம் காலத்திலாயினும் நீக்கிக் கொள்ள வழி

தேடுங்கள். இப்பொழுது நம்மையாளும் ஆங்கில அரசு ஞாயவழிநடப்பது உலகறிந்த உண்மை யாதலால், நம் வாழ்க்கையை எப்படி வேண்டுமானாலும் திருத்திக்கொள்ளலாம். இராஜப் பிரதிநிதி சட்டசபையில், நம் தலைவர்களால் வயது வந்த பிறகுதான் விவாகமுடிக்க வேண்டுமென ஒரு மசோதாக் கொண்டு வந்து, அதைச் சட்டமாக்க முயலவேண்டும். கனம் "படேல்" அவர்கள் ஜாதிப் பிரிவுகருதாது மணமுடிக்கலாமென ஒரு மசோதாக் கொண்டு வந்தார். அது பலரால் ஆதரிக்கப்பட்டும் நிராகரிக்கப்பட்டும் முடிவடையாநிலையி லிருக்கிறது. வைதவ்வியச் சடங்கை நிறைவேற்றிவைத்து வாழ்வு கெடுக்கப்பட்ட சிசுக்களின்நிலையை நோக்கும்பொழுது, இக் கொடிய பழி இன்னும் நம்நாட்டைப்பீடிக்காமல் நிவர்த்திக்க வேண்டுவது எல்லாவற்றிலும் முக்கியமானதென்பதை அறிஞர் மறுக்கார் என்பது எமது துணிபு.

அரசாங்கத்தார் ஜாதிய விஷயங்களிற் றலையிடுவதில்லை யென வாக்களித்திருப்பினும், மனித சமூகத்துக்கே தீமைபயப்பதான இக் கொடுஞ்செயலைத் தடுக்கவேண்டும். உடன் கட்டையேறுவதை (கொடுஞ் செயலென உணர்ந்து) தடுத்தவர்கள், வயதுவாராத குழந்தைகளையும் சிசுக்களையும் ஆயுள் முழுதும் வதைபண்ணுவதான இக் கொடிய முறையை ஏன் தடுத்தலாகாது? இது பற்றி நம் தலைவர்கள் ஒவ்வொரு கூட்டங்களிலும் அரசாங்கத்தாரைத் தூண்டக்கூடிய தீர்மானங்கள் செய்து அவற்றை யவர்களுக்கனுப்பி வயது வந்த பிறகுதான் விவாகம் நடைபெறல் வேண்டுமெனச் சட்டமுண்டாக்குமாறு கிளர்ச்சி செய்ய வேண்டும்.

சட்டங்களை உண்டாக்குவதற்கோ, மாற்றுவதற்கோ, ரத்து செய்வதற்கோ சரியான கருவி பத்திரிகைகள்தாம். ஆனதால் ஒவ்வொரு பத்திரிகாசிரியர்களும் இதுபற்றி நன்முயற்சி செய்தலும் வேண்டும்.

சகோதரர்களே! நம் மிளஞ் சிசுக்களின் நிலையை மறந்து இனியும் பழிக்காளாகாதேயுங்கள். சகோதரர்களே! உறங்காதீர்கள். கிளர்ச்சி செய்யுங்கள். இனிமேலாவது நம்மினத்தவர் சுகமடையட்டும். எல்லாம் வல்ல பரம கருணாநிதியாகிய கடவுள் உங்கள்பால் கருணை காட்டுமாறு பிரார்த்திக்கும்,

கானாடு காத்தான்.

கைவல்ய நவநீத வசனம்

(467-ம் பக்கத் தொடர்ச்சி)

[இனி கிரமப்படி சிருஷ்டியைக் கூறுவாம்.]

முன் கூறியபடி பரம்பிரம்மத்தினிடமாக அஞ்ஞியா யுதித்த அம் மாயைக்கு மூலப்பிரகிருதி, என்று பெயர். இம்மூலப்பிரகிருதியினிடம் சத்துவம், இராஜசு, தமசு, என்று மூன்று குணங்களுண்டு. இம்மூன்று குணங்களும் பிரிக்கப்படாதவை. ஆதலின் அவற்றிற்கு அவிகிர்த (பிரிக்கக் கூடாத) சத்துவ இரஜோதமோ குணங்கள் என்று பெயர்.

1. இம்மூன்று குணங்களில் முதன்மையாகிய சத்துவகுணம் பரிசுத்தமானது. நிர்மல ஜலம் போன்றது. இதற்குச் சுத்தமாயை யென்றும், வித்தை (வித்தை=ஞானம்) யென்றும், ஈசுரகாரண சரீரம் என்றும் பெயர். இது ஆபாசயோக்கியமானது. அதாவது கண்ணாடியைப்போ

லும் சுத்த ஜலத்தைப்போலும் பிரதி பலித யோக்கியமானது. அதில் பரப்பிரம்மத்தின் பிரதி பிம்பம் சிற்சாயைபோல் தோன்றும்.

இதுவே பிரபஞ்ச சிருஷ்டியாதிகளைச் செய்யும் ஜகத் காரணராகிய ஈசுவரன். மூலப்பிரகிருதியின் சத்துவகுணமாகிய சுத்த மாயையிலும், சத்துவத்தில் சத்துவம், சத்துவத்தில் இரஜசு, சத்துவத்தில் தமசு என்ற முக்குணங்களும் அந்தர்ப்பாவமா யிருக்கும். ஆதலால் அச்சத்துவகுண மாயையில் உற்பத்தியான ஈசுவரனுக்கு மேற்படி முக்குணங்களு முண்டு.

இந்த மூன்று குணங்களும் ஒருபோதும் சமமாயிராதென்றும், ஒன்று பிரதான மாகும்போது மற்றை யிரண்டும் தாழ்ந்திருக்கு மென்றும் முன்னமே கூறியிருக்கிறோம். இந்த முக்குணங்களால் அந்த ஈசுவரன் மூன்று தொழில்களைச் செய்கிறார். அதனால் அவருக்கு மூன்று பெயர்கள் உண்டாயின. எவ்வாறெனின் :—

(1) அந்த ஈசுவரனுக்கு சத்துவகுணம் பிரதானமாகும் போது அவர் ஜகத்தை இரக்ஷிக்கும் தொழிலைச் செய்வதால் அவருக்கு விஷ்ணுவென்று பெயர் வந்தது.

(2) அந்த ஈசுவரனுக்கே இரஜோகுணம் பிரதானமாகும் போது அவர் ஜகத்தைச் சிருட்டிக்கும் தொழிலைச் செய்வதால் அவருக்கே பிரம்மா என்ற பெயர் வந்தது.

(3) அதே ஈசுவரனுக்குத் தமோ குணம் பிரதானமாகும்போது அவர் ஜகத்தைச் சங்காரம் செய்யும் தொழிலைச் செய்வதால் அவருக்கே **உருத்திரர்** என்ற பெயர்வந்தது.

[இவ்வாற்றால் ஈசுவரன் ஒருவரே யாயிருப்பினும், அவருக்குண்டான மூன்று குணங்களால் அவர் மூன்று தொழிலைச் செய்வதால், அந்த ஒரே ஈசுவரருக்கே இந்த மூன்று பெயர்களும் உண்டாயின வென்பது கவனிக்கத்தக்கது. மற்ற பல நாமரூபாதிகளும் அங்கங்கள் முதலியனவும் மந்தமதியினர் கடைத்தேறும் வண்ணம் உபாசனைக்காக ஏற்பட்டவை யென்று உணரத் தக்கது. எப்போதும் நாம ரூபத்தையே பற்றிக் கொண்டு சதா ஊஞ்சலைப்போல் சலித்துக்கொண்டே யிருக்கும் மனத்தை ஒரேயிடத்தில் அசைவற்று நிற்கச் செய்ய வேண்டுவதற்காக இந்தச் சகுணோபாசனை அவசியமென்று கருதப்பட்டது]

[இனி சீவர்களின் சிருட்டி கூறப்படுகிறது]

2. மூலப்பிரகிருதியின் இரண்டாவது குணமாகிய இரஜோ குணத்திற்கு அசுத்தமாயை யென்றும் அவித்தை யென்றும் பெயர் (அவித்தை= அஞ்ஞானம்). இதுவே சீவர்களுக்குக் காரண சரீரம். இது மலின ஜலம் போன்றது (அழுக்கடைந்த ஜலம்).

இதில் பிரதிபலிக்கும் பிரம்மச்சாயையே சீவன். இந்த அவித்தைகள் அனந்தமாயிருப்பதால் ஜீவன்களும் எண்ணிலவாயின. முன் சத்துவ குணத்திற்குக் கூறியதுபோல் இந்த இரஜோ குணத்திற்கும் இராஜசில் சத்துவம், இரஜசில் இரஜசு, இரஜசில் தமசு என்று முக்குணங்கள் உண்டு.

இதில் சத்துவகுணம் பிரதானமான சீவர்கள் ஞான நிஷ்டாபரர்களாயிருப்பார்கள். இரஜோகுணம் பிரதானமான சீவர்கள் உலகவிவகாரமாகிய கர்ம நிஷ்டாபரர்களாயிருப்பார்கள். தமோ குணம் பிரதானமானவர்கள்

சீவர்கள் சோம்பல் நித்திரை மயக்கமுடைய மந்தாகளாயிருப்பார்கள்.

3. இனித்தாமத குணம் எஞ்சி யிருக்கின்றது. இது மிக்க அசுத்தமான சேறும் ஜலமும் கலந்தது போன்றது. இத்தமோ குணம் இரண்டு சத்திகளாய்ப் பிரிந்து தோன்றும். அவற்றிற்கு ஆவாணசத்தி யென்றும் விக்ஷேபசத்தி யென்றும் பெயர்.

1. **ஆவாண சத்தி**:—ஆவரணம் என்றால் மறைப்பு என்று பொருள். இது மாரிகால அமாவாசி யிரவில் உண்டாகும் மூடுபனிபோல் ஆன்மா தன் நிஜசொருபத்தையும் பரமான்ம சொரூபத்தையும் உணராவண்ணம் அதன் ஞானமாகிய கண்ணை மறைப்பது. இதற்கே அஞ்ஞான மென்று பெயர். அனுபவத்தில் இதுவே மனதின் இரஜோதமோ குணங்களாய்த் தொழில் புரிவது. இதை யொழிப்பதே ஞானத்தை யடைய மார்க்கம். ஈண்டிது விரிக்கிற் பெருகும் என்றஞ்சி இத்துடன் நிறுத்துகிறோம்.

2. **விக்ஷேப சத்தி**:—விக்ஷேபம் எனில் தோற்றம் என்று பொருள். ஆண்டவன் இந்த விக்ஷேபசத்தியினிடமாகவே ஆன்மாக்கள் மோக்ஷமடைய வேண்டியதற்கு அவசியமான தநு (தேகம்), கரணம் (அந்தக்கரணம்), புவனம் (பூலோகம் முதலிய பல அண்டங்கள்), போகம் (சீவனுடைய போகத்திற்கு வேண்டிய மற்ற வஸ்துக்கள்) முதலியவற்றைப் படைத்தார்.

எவ்வாறெனின்:—

இந்த விக்ஷேப சத்தியினிடமாக ஈசுவரனுடைய சர்வ வல்லமையாகிய சத்தியால் ஆகாயம் தோன்றிற்று. ஆகாயத்தில் வாயு தோன்றியது. வாயுவில் தேயு (அக்னி) தோன்றியது. தேயுவில் அப்பு (ஜலம்) தோன்றியது. அப்புவில் பிருதிவி (மண்) தோன்றியது.

இவ்வாறு தோன்றிய இந்த ஐந்திற்கும் சூக்கும பஞ்ச பூதங்களென்றும் தன்மாத்திரை பூதங்களென்றும் பெயர். இவை மேற்கண்டவாறு ஒன்றிலிருந்தொன்று கிரமமாய் உதித்தன. அதாவது ஒரு பெரிய அடுக்கு தவலைக்குள் நான்கைந்து தவலைகள் ஒன்றிற்குள் ஒன்று அடங்கி யிருப்பது போல் உற்பத்தியாயின.

இவ்வாறு உற்பத்தி வியாபக வியாப்பிய சம்பந்தமானது. அது ஒன்றுக்குள் ஒன்று அடங்கியிருக்கும் சம்பந்தம்-பொடிடப்பிக்குள் பொடி இருப்பதுபோல் - இதில் ஒன்றைத்தனக்குள் அடக்கிக்கொண்டிருக்கும் வஸ்துவிற்கு வியாபகம் என்றும், ஒன்றிற்குள் அடங்கியிருக்கும் வஸ்துவிற்கு வியாப்பியம் என்றும் பெயர். திருட்டாந்தத்தில் டப்பிவியாபகம் அதற்குள்ளிருக்கும் பொடி வியாப்பியம்.

மேற்கண்ட சூக்கும பஞ்சபூதங்கள் அவ்வாறு ஒன்றிலிருந்தொன்றுண்டான படியால், உற்பத்தியான பூதத்திற்குத் தன் இயற்கைக் குணத்தோடு தனக்குக் காரணமாயிருந்த வியாபக பூதத்தின் குணமும் இருக்கும். எவ்வாறெனின் :—

1. ஆகாயத்தின் குணம் யாவற்றிற்கும் இடங்கொடுத் திருப்பதேயாகும்.

2. வாயு—இதற்கு ஆகாயத்தின் குணமாகிய இடங்கொள்ளுதலோடு தன் சொந்த குணமாகிய சலன குணமும் சேர்ந்து இரண்டுகுணங்களுண்டு.

3. தேயு—அக்கினிக்கு மேற்கண்ட இடங்கொள்ளுதல், சலனம், இந்த இரண்டு குணங்களோடு அக்னியின் சுயகுணமாகிய ரூபகுணமும்(கட்புலனுக்கு ஒளியாய்த் தோற்றல்) கூடி மூன்று குணங்களுண்டு.

4. அப்பு :—ஜலத்திற்கு மேலே அக்னிக் குள்ளனவாய்க் கூறிய மூன்று குணங்களோடு தன் சுயகுணமாகிய இரசகுணமும் (உருசி) சேர்ந்து நான்கு குணங்களுண்டு.

5. பிருதிவி :— மண்ணிற்கு அப்பு விடமாயுள்ள நான்கு குணங்களோடு தன் சுயகுணமான கந்தம் (மணம்) என்ற குணமும் கூடி ஐந்து குணங்களுண்டு. (தொடரும்)

சீடன்.

ஆனந்த போதினி ஐந்தாவதாண்டின் வாழ்த்துப் பாக்கள்.

N. S. இராமசந்திரஐயர் B. A. அவர்கள்
இயற்றியது.

வேதாந்த சித்தாந்த வித்யாபி மானமிகு
மாதாந் திரம்வருநம் மானந்தா-நீதானுன்
ஐந்தாம் வயதில் அரும்புகழோ டுய்யகுகன்
பைந்தாளைப் போற்றவரும் பார்.

மதுரை ஜில்லா செம்பூர் வித்வான்
வீ. ஆறுமுகஞ் சேர்வை அவர்கள் இயற்றியன
கொச்சகக் கலிப்பா

1. வானந்த முறுதேவர் மகிழுமதி யுடனியற்றுந்
தானந் தவாதிகளின் தகைமையினி தெடுத்துரைக்கும்
ஆனந்த போதினியின் னைந்தாவ தாம்பருவந்
தானந்தத் திருமாலின் தண்ணருள்போற் றழைக்கமன்னே.

2. திக்திக்குந் தமிழ்மொழியாற் செறிந்திடுபன் னீதிகளை
எத்திக்கும் புகழ்பரப்பி யிசையினொடு குலவிவந்து
புத்திக்குத் தெளிவுதரு மானந்த போதினிக்கோர்
சித்திக்கு மையாண்டு சீர்த்தியொடு செழித்திடுமால்.

3. மண்டலத்திற் றாமரைகள் மலரவரு பரிதியைப்போல்
எண்டிசையி லுள்ளாரி னிதயமகிழ் பூத்திடவே
அண்டிமதி தோறுமெய்து மானந்த போதினிதான்
கொண்டவைந்தாம் வயதுகளி கூர்ந்தினிது வளர்ந்திடவே.

ஆரணி அப்பாதுரைப் பிள்ளையவர்களா லியற்றப்பட்ட
நேரிசை வெண்பா

காசினியெல் லாமதிக்கக் கற்றவருள் ளங்களிக்கப்
பூசிக்கும் ஆனந்த போதினியே—நேசித்து
ஐந்தாண்டு வந்து வந்த அற்புதம்போல் வாழ்கவென் றும்
சந்தாதா ரோடிசைந்து தான்.

கணியம்பாடி-பாலம் பாக்கம்
கா. க தனபாலன் இயற்றியவை.
நேரிசை வெண்பா

கல்விக் களஞ்சியம்போல் காசினியில் வந்துதித்த
செல்வச் சிவானந்த போதினிசீர்-மல்கிடவே
சத்தியரு ளாலுதித்துச் சஞ்சலங்கள் தீர்த்தருளும்
அத்திமுக னைப்பணிவா மார்ந்து.
வறுமை யொழிந்திடவே வையகத்தி லாருங்
குறைகள் பலதீர்ந்திடக்குன் றமல்-முறையாகத்
திங்கடோ றுந்தோன்றிச் சேர்ந்திமோ னந்தனிசை
தங்கியென்றும் வாழ்கவின்பஞ் சார்ந்து.

பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர்
கா. ர. கோவிந்தராஜ முதலியார் அவர்கள்
பாடிய
நிலமண்டில ஆசிரியப்பா.

சீருஞ் செல்வமுஞ் செழித்தினி தோங்கி
வருகு முலகினி லின்பஞ் சிறத்தல்
கல்வியின் மாந்தர் கருத்தினைச் செலுத்தி
அறத்தின் வழியினி லமைதலா லாகும்
அன்னநற் கல்வி யவனியிற் பெருகற்
குற்றிடுங் கருவிக ளோதுறின் பலவே.
அவற்றுள்,
எளியருஞ் செல்வரு மிளைஞரும் பெரியரும்
மாதருந் தொழில்களின் மன்னிய மாந்தரும்
உலகிய லுணர்ந்தாங் குணர்வினைப் பெருக்கி
இகத்தும் பரத்து மின்புறு வகையை
நாடினர் கண்டு நலம்பெறற் காந்துணை
பத்திரி கையெனப் பன்னுவர் பெரியோர்
அத்தகை நலஞ்சா ரரிய பத்திரிகை
அருந்தமிழ் தன்னு ளமைந்துள சிலவே
அவற்றுள்,
தானந் தகைமை தகைகெழு தத்துவம்
ஈனந் தவிர்க்கு மெழிற்றொழில் வாணிபம்
ஞானந் தளிர்க்கு நல்லற வியன் முதல்
தானந்த லில்வகை தாங்கெழ விளக்கும்
ஆனந்த போதினி யையாண் டுற்றது
சிறக்க மற்றிதன் செவ்விய வாழ் நாள்
சிறக்க மற்றிதன் சீரும் செல்வமும்
சிறக்க மற்றிதன் செம்பொருள் வளனே.

கொம்மைப் பாட்டு.

(1) கொம்மியடி பெண்கள் கொம்மியடி திவ்விய
குழந்தையைக் கண்டு கொம்மியடி

நம்மறி வுயரு மானந்த போதினி
நாதனைப் பாடி யடியுங்கடி. (கொ)
(2) ஆதியில் ராக்ஷஸ வாண்டாடி மார்தத்தி
லறிவானந்தன் பிறந்தன்று முதல்
சோதி போலெங்கு முலாவி நன்னீதியைச்
சொரிந்தால் லின்பங்கண் டடியுங்கடி. (கொ)
(3) தாய்ச்சொல்லா வித்தனை நாளாகச் சுத்த
சைதன்னிய வஸ்துபோ லெங்குஞ்சென்று
வாய்மொழிக் கொப்பாக நன்னெறி போதிக்கும்
வத்ஸனைப் பாடி யடியுங்கடி. (கொ)
(4) நாலாண்டு பூர்த்தியாய்ச் சென்ற விந்நாள்வரை
நான்கு வர்ணபேத மில்லாமல்
மேலான நன்னீதி போதித்த வானந்த
மெஞ்ஞானி மேற்பாடி யடியுங்கடி. (கொ)
(5) நான்கு வயதான இச்சிறு வன்மன
நாட்டியத் தாலுல காட்டுமருள்
தேன்கனி யமுதென் றெல்லோரு முண்ணுஞ்
சிறப்பைப் பாடி யடியுங்கடி. (கொ)
(6) கர்மத்தாற் பெற்றவித் தேகத்தினை நித்ய
கர்மத்தால் சுத்திசெய் யூகத்தினை
மர்ம மொழித்துச்சொல் லானந்த போதினி
வல்லோனைப் பாடி யடியுங்கடி. (கொ)
(7) அறிவையர்க் கானந்த போதினி போதிக்கும்
அற்புதத் தாலுமை நற்பதமும்
அரிய மாமறை ஞானமுங் கீர்த்தியுஞ்
அளிப்பதைப் பாடி யடியுங்கடி. (கொ)
(8) வயிற்றுக் கல்வியைக் கற்றுக்கொண்டு தந்தம்
வல்லமைக் கல்வியை விட்ட மாந்தர்
பயித்தியந் தீர்க்கு மானந்த போதினி
பண்பனைப் பாடி யடியுங்கடி. (கொ)
(9) நேரிலி ருந்துப தேசஞ்செய் யாசான்போல்
நீடிக்கும் புத்தக ரூபமதிக்
கூரிய வானந்த போதினி யெந்நாளும்
குவலயத் தோங்கிடப் பாடுங்கடி. (கொ)
(10) விடயதா னஞ்செய்யும் வித்வான்களும் இதை
வெளியுல வச்செய்பத் திராதிபரும்
அடைய மேனிலை யண்ணல் பதம்போற்றி
யாடி யாடிக்கொம்மி யடியுங்கடி (கொ)
(11) பூமி முழுது முலாவித் திரிந்து நற்
போதனை செய்யண்ணல் மீதிற்றுரை
சாமிசொற் கொம்மியில் தப்பேதிருப்பினும்
தயவுடன் மன்னிக்க வேண்டி நன்றாய்க்—(கொம்மியடி பெண்
கள் கொம்மியடி.)

பா. நா. துரைசாமி பிள்ளை.

மர வியாபாரம், ஒலவக்கோடு.

வைத்தியக் குறிப்பு.

(474-ம் பக்கத்தொடர்ச்சி)

சகலவித வியாதிகளும் ஆகாராதிகளாலும், உட்கொள்ளும் சுவாசத்தினாலும், சீதோஷ்ண நிலைகளினாலும், நமது சரீரத்திலுள்ள இரத்தமானது சுயநிலைமாறிச் சரீரத்தில் விஷம் உண்டாவதனால் சம்பவிக்கின்றனவென்பது சகலரும் உணர்ந்த விஷயம். அதனால் முன்னோர்கள் இரத்தத்தில் கலந்த விஷத்தை மாற்ற ஔடதங்களென்னும் வேறு விஷத்தை உபயோகிக்கும்படி ஏற்பாடு செய்து, அவற்றின் நானாவித பேதங்களையும் சாஸ்திரத்தின்கண் விஸ்தாரமாய் எழுதிவைத்தார்கள்.

(சாதாரணமாய் ஔடதத்தை விஷம் என்று எப்படிச் சொல்லலாம் என்றால், வைத்தியம் உணர்ந்தவர்கள் ஔடதத்தை விஷம் என்று ஒப்புவது சகஜமானபடியால் மற்றவர்களும் ஒப்புக் கொள்ளக் காரணம் உண்டென்றே யூகிக்கலாகும். எப்படியெனில், சகல ஜீவர்களிடத்தும் இயற்கையாய் உணர்வு என்னும் ஒரு கருவியுண்டு. அதனால் அவை தம் சரீரத்திற்குக் குணம் செய்யும் பதார்த்தத்தை உள்ளுக்கு வாங்குவதற்கும் சரீரத்திற்கு விஷம் செய்யும் வஸ்துக்களை வெளியில் தள்ளுவதற்கும், நாவினிடம் உணர்வு இருக்கிறது. சரீரத்திற்கு ஔடதமாகிய விஷத்தை நாவானது உள்ளுக்குத் தள்ளுவது கஷ்டமாயிருப்பதிலிருந்தே, அது விஷம் என்று யாவரும் தெரிந்து கொண்டாலும், முதல் உண்டாயிருக்கும் விஷத்தை நீக்க வேறொரு விஷத்தைக் கொள்ள வேண்டியிருப்பதால், பலவந்தத்தால் உள்ளுக்குக் கொள்ளவேண்டி யிருப்பது சகலரும் அனுபவமாயறிந்த விஷயமே. விஷமுண்டான சரீரிகளுக்கு விஷத்தையே கொடுக்கவேண்டியிருப்பதால் அச் சிகிச்சையையும் விஸ்தாரமாய்ச் சொல்லி அத்தகைய விஷம் உண்டாகாதிருக்கச் சில மார்க்கங்களையும் முன்னோர்கள் சொல்லி வைத்தார்கள். அவை யாவையெனில், சௌசம், ஆசமன்னியம், பிராணாயாமம், ஸ்நாநம், சந்தியாவந்தனம் ஆகிய இவைகளேயாம். இவற்றின் இரகசியங்களை அடுத்த சஞ்சிகையில் விஸ்தாரமாகச் சொல்லுவோம்.

(தொடரும்).

டாக்டர், மே. மாசிலாமணி முதலியார்

கற்கோட்டை—நாவல்

(479-ம் பக்கத்தொடர்ச்சி)

பிரபு தன் கையில் ஒரு தீபம் எடுத்துக்கொள்ள, இருவரும் இருண்ட நிலவறைக்குள் சென்றார்கள். அங்கு அக்கிணற்றின் ஓரத்திலுள்ள சுவரில் இருந்த இரகசியக் கதவைத் திறந்து பிரபு தீபத்தோடு வாயிற்படியருகில் நின்றார். மணவாளன் எந்திரத்தினருகிற் சென்று அதை நன்றாய்ப் பார்த்து "பிரபுவே, கயிறு அறுந்துவிட்ட ஒரு பழுதேயன்றி வேறொன்றுமில்லை. நான் ஒருவனே இதைச் சரிப்படுத்திவிடுவேன். தாங்கள் சென்று சயனித்துக் கொள்ளுங்கள்" என்றான்.

பிரபு "உதவி யில்லாமல் நீயே செய்து விடுவாயா?" என்று உறுதியாய்க் கேட்டறிந்துகொண்டு. "சரி நான்போகிறேன், நீ படியை மேலேற்றியபின் மரைகளை முடுக்கி விட்டுவா; மறந்துவிடாதே" என்றார்.

மணவாளன்,—"தெரியும் தெரியும். நீங்கள் என்னைவும் சந்தேகங்கொள்ள வேண்டாம்" என்றான்.

பிரபு நிம்மதியோடும் சந்தோஷத்தோடும் போய்ப் பள்ளிகொண்டார் மணவாளன் சதிக் கொலைசெய்யும் எந்திரத்தைச் சரிப்படுத்த வாரம்பித்தான். நெடுந்தூரம் பிரயாணம்செய்து அலுத்திருந்தானாதலால், தனியே அவ்வேலையை முடிப்பது மிக்க கஷ்டமாகவே யிருந்தது. சுமார் ஒருமணி நேரம் கஷ்டப்பட்டுத் தன் வேலையை முடித்ததே மிக்க ஆயாசந் தோன்றியதால், துரிதமாய் ஆவலோடு தன் அறைக்குச் சென்று சயனித்ததும் நல்ல நித்திரை யடைந்தான்.

மறுநாள் காலையில் சுந்தரநாயகம் பிரபுவும் மணவாளனும் இன்னும் இரண்டு ஆட்களும் புறப்பட்டு ஸர்தார் அமிர்தநாயகம் வீட்டிற்குச் சென்றார்கள். அவரிருப்பது பெரிய கரும்பூர். அங்கு விசாரித்ததில் அவர் முன்னாள்மாலை சின்னக்கரும்பூருக்குச் சென்றவர் இன்னும் வரவில்லை யென்றும், பெரும்பாலும் அங்குள்ள தம் சகோதரி வீட்டில் தங்கியிருக்கலாகுமென்றும் கேள்விப்பட்டு, விரைவா யங்குசென்றார்கள்.

ஸர்தார் பிரபுவின்கூடவிருக்கும் மணவாளனைக் கண்டதும் 'ஓகோ, இவன்வந்துவிட்டானே!' என்று திடுக்கிட்டு, என்னசமாசாரம்? என்றார்.

பிரபு உண்மையாகவே வியாகுலப் படுபவர்போல் "ஆ! எனக்குக் கூற மிக்க விசனமா யிருக்..." என்பதற்குள் ஸர்தார்.

"ஆ! கொஞ்சம் இருங்கள். இதோ வருகிறேன். இரவு கொள்ளைக் கப்பலொன்று நமது கடலோரம் வந்திருந்தது. இரண்டொரு சமாசாரம் கூறிவிட்டு நொடியில் வருகிறேன்..." என்று கூறிக்கொண்டே, தமது தங்கை வீட்டில் தாம் தங்கும் அறைக்குச் சென்று முத்திரையிட்ட ஒரு கடிதவுறையை யெடுத்துத் தம் அந்தரங்க வேலையாளிடம் கொடுத்து,

"இதை மடியில் மறைத்து வைத்துக்கொள். இங்கிருந்து நேராய் சிறைச்சாலைக்குச் சென்று காவற்றலைவனிடம் நீ கண்ணபிரான் பிரபுவைக் காண விரும்புவதாய் இரகசியமாய்க் கூறு. அவன் ஆக்ஷேபனை செய்யாது உள்ளே விடுவான். உள்ளே சென்று கண்ணபிரான் பிரபுவிடம் இதைக் கொடுத்து இதற்குள் இருக்கும் கடிதத்தைச் சமயம் வரும்போது உபயோகப் படுத்தும்படி நான் கூறியதா யியம்பு. இதைப் பிரித்துப்பார்த்து உன்னை ஏதாவது கேள்விகள் கேட்டால், தெரிந்தவரையில் கூறிவிட்டு இப்போது எதையும் தெரிந்துகொள்ள ஆத்திரப்படாமல் பொறுமையாய்ச் சகித்துக்கொண்டிருக்க வேண்டுமென்றும், பிறகு எல்லாம் தெரியவருமென்றும் கூறு" என்றார். வேலைக்காரன் அவ்வாறே கூறுவதா யியம்பிச் சென்றான்.

அதன்பிறகு ஸர்தார் பிரபுவிடம் வந்து உட்கார்ந்து, "இனி இராணியிட மிருந்து வந்த சமாசாரம் என்ன?" என்றார்.

மணவாளன்.—"சட்டப்படி சமயோசித சந்தர்ப்பத்தை யனுசரித்து எவ்வாறு நடத்த வேண்டுமோ அவ்வாறு நடத்தும்படி கட்டளையிடுவதாய்இராணி தங்களிடம் தெரிவிக்கச் சொன்னார்கள். மேலும் இராணி அதைத் தம் பிரதம அரண்மனைக் காரியஸ்தர் முன்பும் தம் தோழிகள் முன்பும்கூறியபடியால் , அடியேன் கூறுவது உண்மையென்று தாங்கள் அறியலாகும்" என்றான்.

ஸர்தார்.—"ஓ! நான் சந்தேகங் கொள்ளவில்லை. இராணி கட்டளை தெளிவாய் விளங்குகிறது. இது மரண தண்டனை விதிப்பதுபோலவேதான்" என்றார்.

சுந்தரநாயகம் பிரபு மிக்க துயர மடைந்தவர்போல் "அந்தோ! என் நண்பரே! எங்கள் குடும்பத்தில் இப்படிப்பட்ட கோரமும் சம்பவிக்க வேண்டுமோ! நான் என் சொந்த ஆளை யனுப்பி யென்ன சிபாரிசு செய்தும் கடைசியில் பயனில்லாமற் போய்விட்டதே" என்றபோது, ஸர்தார் சற்று அவசரமாய், "நல்லது நான் என் கடமையைச் செய்ய வேண்டும். செய்தே தீரவேண்டும். டாபம், வாலிப வயதுள்ள கண்ணபிரான் பிரபு எப்படியும் இராஜத்துரோகிக ளடையும் மரணத்தை யடைந்தே தீரவேண்டும். ஆயினும் தங்கள் அந்தஸ்தையும் கௌரவத்தையும் உத்தேசித்து அதை ஒழுங்கின்படி நடத்தவேண்டும். அத்தண்டனை பகிரங்கமான சபையில் கூறப்பட வேண்டும். சற்று பொறுங்கள், வேண்டிய ஏற்பாடுகளைச் சீக்கிரம் செய்துவிட்டு இதோ வந்துவிடுகிறேன்" என்று எழுந்தார்.

இதைக்கேட்ட பிரபு பகிரங்க சபையில் தீர்ப்பு கூறப்பட்டால் கண்ணபிரான் எங்கே தன் சதிச் செயலையும் படிக்கட்டுகளின் பயங்கர இரகசியம் முதலிய யாவற்றையும் வெளியிட்டு விடுவானோ வென்று பயந்து, ஸர்தாரை நோக்கி,

"நண்பரே, தயவுசெய்து அப்படிச் செய்யவேண்டாம். என்மனம் மிக்க வியாகுலத்திற்குள்ளாகுமென்பதைச் சற்று சிந்தியுங்கள். கண்ணபிரானுக்கும் அது எவ்வளவு மன வருத்தத்தையும் அவமானத்தையும் உண்டாக்கும் பாருங்கள். நானும் சகிக்க முடியாமற்போகு மென்பதற்காகவாவது அப்படிச் செய்யாது இரகசியமாகவே முடித்து விட்டால் மிக்க உதவி செய்ததாகும்" என்றார்.

ஸர்தார்:—"பிரபுவே! தங்கள் சுற்றத்தார் விஷயத்தில் தங்களுக் குண்டாயிருக்கும் துயரத்தை நான் நன்கறிவேன். தாங்கள் எதிரில் இருக்க வேண்டுமென்ற அவசியமேயில்லை. மற்றையோர்க்கும் அறிவுறுத்துவதற்காக நான் இதில் என் கடமையைச் சரியாகவே செய்து தீர வேண்டும். என் தீர்மானத்தின்படிதான் என் பொறுப்பான தொழிலை நான் நிறைவேற்ற வேண்டும்" என்று கூறி அறையை விட்டுச் சென்றார்.

ஸர்தார் சென்றதே மணவாளன் பிரபுவை நோக்கி, "பிரபுவே! இவன் ஏதேனும் சேஷ்டை செய்வானோ? ஆலசியம் செய்தால் கண்ணபிரான் எங்கே கோபத்தால் சங்கதியைக் கூறிவிடுவானோவென் றஞ்சுகிறேன்" என்றான்.

பிரபு.—"இவன் என்ன செய்ய முடியும், அப்படி யொன்றுமிராது. இவன் ஒருவிதப் பிடிவாதக்காரன். அவ்வளவேயன்றி வேறில்லை. மேலும் அந்தப் பயல் ஒன்றும் அப்படிக்கூறவும்மாட்டான். ஒருசமயம் கூறினாலும் இவன் வேணுமென்று கூறுகிறான், இவனுக்குப் புத்தி சபலித்து விட்டதென்று யாவரும் கூறுவார்களேயன்றி, அதை யார் நம்புவார்கள்" என்றார்.

அச்சமயம் இரத்னம்மாளுடைய வேலைக்காரன் இவர்கள் இருவர்க்கும் சிற்றுண்டி கொணர்ந்து வட்டித்தான். இருவரும் அவற்றை யுண்டு முடிந்ததும், ஸர்தாருடைய ஆட்களில் ஒருவன் வந்து "எஜமான் கூடத்தில் இருக்கிறார்கள். உங்களை யழைத்து வரும்படி ஆக்ஞாபித்தார்கள்" என்றான். இருவரும் அவன்கூடவே சென்றார்கள். (தொடரும்)

ஆரணி - குப்புசாமிமுதலியார்.

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்

சித்தார்த்திஷு ஆவணிமீ—சாலிவாகனம் 1841-கலியுகாதி 5020

பசலி 1328-29—கொல்லம் 1094-95 - ஹிஜரி-1337-

இங்கிலீஷ் 1919-ம்ஷு ஆகஸ்டுமீ—செப்டம்பர்மீ

ஆவணிமீ	ஆகஸ்டுமீ	வாரம்	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
1	17	ஞா	ஷ-20-40	அசு-24-10	சித்த-60	....
2	18	தி	சப்-14-40	பர *-20-7	சி-20 ம	கரிநாள்
3	19	செ	அ-8-33	கிரு-16-5	சி-16 அ	குளேபோட
4	20	பு	நவ-2-34	ரோக-12-2	சித்த-60	
5	21	வி	ஏ-51-42	மிரு-8-23	மர-60	
6	22	வெ	து-47-15	திரு-5-15	சித்த-60	
7	23	ச	திர-43-27	புன-2-47	சித்த-60	
8	24	ஞா	ச-40-44	பூச-1-12	சித்த-60	
9	25	தி	●-39-15	ஆயி-0-41	சி-½ ம	
10	26	செ	பிர-38-57	மக-1-19	சித்த-60	
11	27	பு	து-39-57	பூர-3-13	அ-60	
12	28	வி	தி-42-11	உத்-6-25	சித்த-60	
13	29	வெ	ச-45-27	அஸ்-10-45	அ-11 சி	
14	30	ச	ப-49-37	சித்-15-59	ம-16 சி	....
15	31	ஞா	ஷ-54-25	சுவா-22-3	சித்-22-ம	விவாஹம், உபனயனம்
16	1919ஷு செப்டம்பர் 1	தி	சப்-59-28	விசா-28-36	ம-29 சி	இரவு விவாஹம்
17	2	செ	அ-60-0	அனு-34-46	சித்த-60	ஆபரணம்கொள்ள
18	3	பு	அ-4-13	கேட்-40-45	சி-40 ம	விவாஹம், சீமந்தம்
19	4	வி	நவ-8-29	மூல-46-1	சித்த-60	கிணர்வெட்ட
20	5	வெ	தச-11-51	பூரா-50-19	சித்த-60	காலையில் கணிதாரம்பம்
21	6	ச	ஏ-14-3	உத்-53-19	சித்த-60	மேற்கே பிரயாணம்
22	7	ஞா	து-15-0	திரு-55-9	அ-55 ம	வாழை, தென்னை வைக்க
23	8	தி	திர-14-42	அவி-55-46	சித்த-60	விவாஹாதி சர்வமுகூர்த்
24	9	செ	ச-13-12	சத-55-15	மர-60	.... [தம்
25	10	பு	○-10-35	பூர-53-36	அ-60	....
26	11	வி	பிர-6-53	உத்-51-10	சித்த-60	
27	12	வெ	து-2-31	ரே-47-58	அ-60	மாளயபக்ஷமான பிது
28	13	ச	ச-51-37	அசு-44-15	சி-60	ருதினமானதால் சுப
29	14	ஞா	ப-55-41	பர-40-17	சித்த-60	காரியங்கள் நிவர்த்தி
30	15	தி	ஷ-39-43	கிரு-36-19	ம-36 அ	க்கப் பட்டது.
31	16	செ	சப்-33-46	ரோ-32-13	அ-32 சி	

		கே	
	14-சி-பு 12-சு வக்ராரம்.		செ குே-பு
			ர-ச
	ராகு		சு

PRINTED AND PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE "ANANDA BODHINI" PRESS, 15, VENKATESA MAISTRY STREET, MADRAS.